# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஒக்டோபர் 26, 2018. இதழ் - 36




விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com




**பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஜே.ஆர்செய்த ஆட்சிக்கவிழ்ப்புச் சதி**

இலங்கை சுதந்திரம் தொடக்கம் எத்தனையோ ஆட்சி கவிழ்ப்பு சதிகள் பக்கம் - 05



**கழிவு அகற்றுவதில் மக்களின் ஒத்துழைப்பும், விழிப்புணர்வும் தேவை**

மட்டக்களப்பு மாநகரசபை கழிவகற்றலில் பல சிரமங்களை எதிர்கொள்கிறது பக்கம் - 09



**கழிவில் உருவாகும் கற்பனைத்திறன்**

'மாணவர்களுக்கேற்ற கல்விமுறைமை இலங்கையில் நடைமுறையிலிருந்திருந்தால், பக்கம் - 07



**செய்திகளின் மறுபக்கம்**

ஒரு செய்தியாளன் தான் பார்த்து அறிந்தவை எல்லாவற்றையும் செய்தியாக பக்கம் - 03



## 'வாழைச்சேனை காகித ஆலை விரைவில் செயற்பாட்டுக்கு வரும்'

## 'கிழக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி'

வாழைச்சேனை காகித ஆலையை மீண்டும் மிக விரைவில் செயற்படச் செய்வதுடன், அங்கு கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்புக்கு வழி செய்யப்படும் என தேசிய காகித ஆலைகள் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் புதிய தலைவரான எஸ். கணேசமூர்த்தி கூறியுள்ளார்.

காகித ஆலைகள் கூட்டுத்தாபன சபையின் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து "அரங்கம் செய்திகள்" பத்திரிகையுடன் பேசிய அவர், வாழைச்சேனை ஆலையை மீண்டும் செயற்படச் செய்வதன் மூலம் அரசாங்கத்துக்கும் மீண்டும் அதன் மூலம் நல்ல வருவாயை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த பல தசாப்தங்களாக, இலங்கை அரசாங்கத்துக்கு நல்ல வருவாயை பெற்றுத்தந்து வந்த வாழைச்சேனை காகித ஆலை, போர் மற்றும் பிற காரணங்களால் கடந்த சுமார் 20 வருடங்களாக இயங்கா நிலையை எட்டியுள்ளது. அது சிறப்பாகச் செயற்பட்ட காலப்பகுதியில் அது வெற்றிகரமான ஒரு அரசாங்க கூட்டுத்தாபனமாக செயற்பட்டதுடன், சுமார் 3000 பேருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வந்தது. ஆனால், போரின் காரணமாக அது சரியாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆகவே அதனை மீண்டும் இயங்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், தற்போது அதனை மீண்டும் புனரமைத்து செயற்படச் செய்வதற்காக அமைச்சரவை தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதனை அடுத்தே இந்த புதிய நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது வாழைச்சேனை காகித ஆலையின் நிலைமை, அங்குள்ள இயந்திரங்கள் ஆகியவை குறித்து மீளாய்வு செய்வதற்காக நிபுணர்களை கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனை அடுத்து மிகவும் விரைவில் அதனை செயற்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் நாட்டுக்கு நல்ல வருவாய்

தொடர்ச்சி... (பக்கம் -14 )

## ஒக்டோபர் 24 போராட்டம்!

### ஒரு நல்ல ஆரம்பம் மாத்திரமே

(என்.சரவணன்)

தற்போது நடந்துமுடிந்துள்ள ஒக்டோபர் 24 கறுப்புச் சட்டைப் போராட்டம் ஆளும்வர்க்கத்தையும் ஏனையோரையும் திரும்பிப்பார்க்கச் செய்துள்ளது. அதனை சாத்தியபடுத்தியவர்களுக்கு மிகப்பெரும் வாழ்த்துக்கள். அதேவேளை நாம் வாழ்த்துக்களோடு சுருங்கிவிடாத, பெருமிதம் நமது பலவீனங்களை மறைத்துவிடாதபடி ஒரு சுயமதிப்பீடும், சுயவிமர்சனமும் அவசியம். அத்தகைய சுயவிமர்சனம் மட்டுமே நம்மை உரிய வழியில் அடுத்த கட்டத்தை நோக்கி வழிநடத்த உதவும்.

இதனை மலையகத்தின் எழுச்சியாக கொண்டாட முடியும் என்று தோன்றவில்லை. அந்த சொல் ஒரு மிகையானது. அந்த சொல் பெரும் அரசியல் உள்ளடக்கம் சார்ந்தது. ஆனால்



இது ஒரு நல்ல தொடக்கம்.

கடந்த 5 ஆண்டுகளுக்குள் மாத்திரம் மலையகத்தில் பல்வேறு இளைஞர் அமைப்புகளும், பண்பாட்டு அமைப்புகளும், அரசியல் அமைப்புகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதுபோல மலையகத்துக்கான ஊடகங்களும், ஏற்கெனவே இருந்த ஊடகங்களில் மலையகத்துக்கான இடமும் சற்று பெருகியிருக்கின்றன. மலையகத்தின் கல்வி நிலையும் கூட முன்னேற்றம் கண்டிருக்கிறது. அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் மலையகத்தின் நலன்புரி சேவைத்திட்டங்கள் விரிவாகியிருக்கின்றன. இவை அனைத்தும் மலையகத்தின் விடிவுக்கு வலு சேர்க்கக் கூடியவை தான்.

அதே வேளை தீர்க்கப்படாது இருக்கின்ற பிரச்சினைகள் பெருந்தொகை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை அவற்றில் பிரதானமானது.

மக்களின் தன்னெழுச்சி சதா காலமும் இருந்துவிடுவதில்லை. அது அவ்வப்போது தான் அரிதாக வெளிப்படும். அதனை சரியாக இனங்கண்டு உரிய வகையில் கருத்தேற்றி, ஆதரவு சக்திகளை திரட்டி, அமைப்பு வடிவம் கொடுத்து, அதற்கான கொள்கைத் திட்டம், வேலைத்திட்டம் என்பவற்றை தீட்டி முன்னெ டுக்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படியான தன்னெழுச்சியை கிளர்ச்சியாகவும், போராட்டமாகவும், முன் னெடுக்கும் தார்மீகச் சுயசக்தியை பலப்படுத்தும் பலமும் தகுதியும் இன்று யாருக்கு இருக்கிறது?

இத்தகைய தன்னெழுச்சிக் காலங்களில் மக்கள் கொடுக்கும் கால அவகாசம் குறைந்ததே. அந்தக் கால எல்லைக்குள் அதனை உரிய அரசியல் கிளர்ச்சியாக மாற்றியமைப்பது எளிமையான காரியம் இல்லை. குறைந்தபட்சம் தீவிர பிரக்ஞை உள்ள சக்தியால் மாத்திரமே அதனை

தொடர்ச்சி... (பக்கம் -15 )


முதலாம் வகுப்பிற்கு பிள்ளையை சேர்ப்பதில்
அநீதி இழைக்கப்பட்டதா?
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org
இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்
011 2 501 503
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

# ‘ஆலயம் அகற்றப்பட்டால் இராஜினாமாச் செய்வேன்!’ -- கல்முனை பிரதிமேயர்



(காரைதீவு சகா)

கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக வளாகத்திலுள்ள பிள்ளையார் ஆலயம் அகற்றப்பட்டால் மறுகணம் எனது பிரதிமேயர் பதவியை நான் இராஜினாமாச் செய்வேன் என்று கல்முனை மாநகரசபையின் பிரதிமேயர் காத்தமுத்து கணேஸ் சூளுரைத்தார்.

கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக ஆலயம் தொடர்பான சர்ச்சை மாநகரசபையில் கடந்த அமர்வில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது பிரதிமேயர் எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தார் என்ற செய்தி தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: ‘நாம் த.வி.கூட்டணியினர் முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்து ஆட்சியமைத்துச் செயற்பட்டுவருகின்றோம். இந்நிலையில் ஆலயப்பிரச்சினை நீதிமன்றுக்குச் சென்றுள்ளது.

நாம் அரசியல் ரீதியாக இணைந்து செயற்பட்டபோதிலும் இனம், சமயம் என்று வருகின்றபோது நாம் எமது தாயைத்தான் நேசிப்போம். அதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. எமது மொழி எமது இனம் எமது சமயத்திற்குத்தான் நாம் முன்னுரிமை வழங்குவோம். அதற்காக இது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரானது என்பதல்ல. அவர்கள் எமது நண்பர்கள். நாம் ஒற்றுமையாகவே வாழவேண்டும்.

எமது மேயர் இதனை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லுமுன்னர் எம்முடன் பேசியிருந்தால் அதனை சுமுகமாகத் தீர்த்திருக்கலாம்.

எனினும் இன்னும் காலம் கடந்துவிடவில்லை. எதிர்வரும் 30ஆம் திகதி கல்முனை நீதிமன்றில் வழக்கு நடக்க உள்ளது. அதனை வாபஸ் பெறுமாறு கூறியிருக்கிறேன். நிச்சயமாக எனது கோரிக்கையின்பேரில் அவர் 30ஆம் திகதிக்கு முன் வாபஸ் பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது. ஆளும் அரசுடனும் ஸ்ரீ.ல.மு. காவுடனும் நல்ல உறவு வைத்துள்ள நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் ஐயா இக்கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக தரமுயர்த்தலைச் செய்திருந்தால் இப்பிரச்சினை இன்று எழுந்திருக்காது. இத்தருணத்திலாவது அவர் செய்ய முன்வரவேண்டும். கல்முனைக்கு வந்து தேர்தல் முடிந்து 7 நாட்களுள் தரமுயர்த்தித்தருவேன் என்று சொன்னார். இன்று எத்தனை மாதங்களாகின்றன?

அம்பாறை மாவட்ட த.தே.கூ. எம்பி.கோடீஸ்வரன் சென்ற இடமெல்லாம் கூறுகின்றார் தரமுயர்த்தல் தொடர்பாக ஜனாதிபதியுடனும் பிரதமருடன் பேசியுள்ளேன் என்று. வெறும் வாய் வீச்சில்லாமல் முடியுமென்றால் இதனை தரமுயர்த்திக்காட்டட்டும். நானும் வாழ்த்துத்தெரிவிப்பேன்’ என்றார். இதற்கிடையே, இந்த பிள்ளையார் ஆலயம் தொடர்பாக கல்முனை நீதிமன்றில் தொடுத்த வழக்கை வாபஸ் பெறவேண்டும். இன்றேல் நாம் தங்களுக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளவேண்டி நேரிடும் என்று கல்முனை மாநகரசபை மேயர் சட்டத்தரணி எ.எம். றக்கீப்பிடம் மாநகரசபையின் ஆளும் கட்சியின் தமிழ் பெண் உறுப்பினர்கள் நால்வரும் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த திருமதி வி.புவனேஸ்வரி, திருமதி நந்தினி நடராசா, த.வி.கூட்டணியைச் சேர்ந்த திருமதி சுமித்ரா ஜெகதீசன், சுயேச்சை உறுப்பினரான திருமதி செலஸ்ரினா றாகல் ஆகிய நான்கு தமிழ் பெண்உறுப்பினர்களே இவ்விதம் கோரிக்கைவிடுத்து மகஜரைக் கையளித்துள்ளனர்.

## அறிவித்தல்

**மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் உள்ள காணிகளின் உப பிரிவிடுகைகளையும் ஏனைய தேவைப்பாடுகளையும் நிறைவு செய்தல்.**

மட்டக்களப்பு,மாநகர சபை எல்லைக்குள் காணிகள் பிரிக்கப்பட்டு பகுதிகளாக கைமாற்றம் செய்யப்படும் போது முழுக் காணியளவில் உபபிரிவிடுகை (காணிகளைத் துண்டுகளாகப் பிரிவிடல்) செய்ய வேண்டிய அமைப்பையுடைய காணிகளுக்கு நில அளவை வரைபடம் தயாரிக்கப்பட்டு காணி உபபிரிவிடல் அனுமதியினை மாநகர சபை / நகர அபிவிருத்தி அதிகார சபையில் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

உபபிரிவிடுகை அனுமதியை அடிப்படையாகக் கொண்டே மாநகர சபை பெயர் மாற்றம், காணி உரிமை மாற்றம், மற்றும் கட்டட/மதில் நிர்மாணிப்பு அனுமதிகள் வழங்க இப்பிரிவிடுகை முக்கிய ஆவணமாகக் கருதப்படுகின்றது.

எனினும் மாநகர எல்லைக்குள் வெவ்வேறு இடங்களில் குறிப்பாக பூம்புகார்ப் பகுதி வாவிக்கரை வீதி, சுமை தாங்கியப் பகுதி, மற்றும் வைத்தியசாலை வீதிப் பகுதிகள் (18ம் வட்டாரம்) உள்ளடக்கிய சில காணிகள் மேற்படி பிரிவிடல் அனுமதியுடன் ஏனைய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளாமல் காணிகள் துண்டங்களாக்கப்பட்டு கைமாற்றம் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றை சீர்செய்யும் வகையில் இதுவரை காலமும் முறையான பிரிவிடலுடன் ஏனைய அனுமதிகளை பெற்றுக் கொள்ளாத காணிகள் தொடர்பிலான உரிமையாளர்கள் குறிப்பாக வைத்தியசாலை வீதிப் பகுதி மற்றும் வாவிக்கரை வீதி-01 இன் [ஆற்றங்கரைப் பகுதியிலுள்ள அனைத்து குடியிருப்பாளர்களும்] இவ் அறிவித்தல் விடுக்கப்பட்ட நாளில் இருந்து அதாவது எதிர்வரும் 2018 கார்த்திகை மாதம் 30ம் திகதிக்குள் மாநகர சபையை தொடர்பு கொண்டு தங்களது காணிகளிலுள்ள மேற்படி பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முகமாக தங்களது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு.

தி.சரவணபவன்
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.

## உளவளநல கண்காட்சி



(லியோண்)

காந்தி பூங்காவில் மட்டக்களப்பு உளவளநல நிலையமானது (Professional Psychological Counselling Centre) 25-10-2018 நேற்று உளவளநல கண்காட்சியை நடாத்தியது.

மட்டக்களப்பு உளவளநல நிலையப் பணிப்பாளர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் தலைமையில் காலை 8.30 மணியளவில் மட்டு பொது பேரூந்து தரிப்பிடத்தில் நடைபயணமாக ஆரம்பமாகி காந்திப்பூவரை சென்று அங்கு கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டு மாநகர மேயர் தி.சரவணபவன், அருட்தந்தை



றொசாயிறோ வின்சன், அருட்தந்தை லோறன்ஸ் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இது உளநலத்தினை பேணும் வகையில் மாணவர்கள், இளைஞர், யூவதிகள் மற்றும் பெரியோருக்கு சிறந்த அறிவூட்டலை வழங்கும் வகையிலான கண்காட்சியாக அமைந்தது. அங்கு பல்வேறு தரப்பினராலும் விழிப்பூட்டல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# இரா. துரைரத்தினத்தின் செய்திகளின் மறுபக்கம்




ஒரு செய்தியாளன் தான் பார்த்து அறிந்தவை எல்லாவற்றையும் செய்தியாக கொடுத்துவிட்டேன் என்ற திருப்தி உணர்வுடன் என்றும் அடங்க முடியாது. ஆனால், காலங்கடந்தாவது தான் சாட்சியாக இருந்த வரலாற்றின் சில பக்கங்களை பூர்த்தி செய்த திருப்தி இப்போது துரைரத்தினம் அண்ணருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

துரைரத்தினம் அண்ணன் பற்றி பலவிதமான பார்வைகளை பலரும் முன்வைத்திருக்கிறார்கள். அவர் கோபம் கொள்ளுகின்ற போது உதிர்க்கின்ற வார்த்தைகள் சில வருடங்களுக்கு முன்னதாக ஐரோப்பிய - இந்திய மண்ணில் சர்ச்சையாக உருவெடுத்ததை எவரும் மறந்திருக்க முடியாது.

ஆனால், இவை எல்லாவற்றையும் கடந்த, ஒரு பொறுப்பான பத்திரிகையாளரை, அவரின் மன உணர்வை இந்த நூலில் நான் பார்க்கிறேன். இலங்கையில் நான் இல்லாத காலத்தை சேர்ந்தவை இவற்றில் பல கட்டுரைகள். நானறியா மட்டக்களப்பின் சோகங்கள் பலவற்றை இந்த புத்தகத்தில் அவர் பதிவு செய்திருக்கிறார். உண்மையில் அண்மைக்காலமாக மட்டக்களப்பு செய்தியாளர்களை பார்த்து பலரும் முன்வைக்கும் விமர்சனங்களுக்கு காரணங்களை இந்த புத்தகம் சொல்லாமல் சொல்லியிருக்கிறது.

மட்டக்களப்பு அசம்பாவிதங்களின் மேடையாக இருந்த ஒரு காலத்தில் அவற்றை எல்லாம் நேரடியாக பார்த்தும் பேசமுடியாமல் இருக்க நேர்ந்தமை, ஒரு பத்திரிகையாளனுக்கு எவ்வளவு கொடுமையான அனுபவம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதேவேளை அவை அனைத்தையும் பத்து வருடங்கள் கழிந்த பிறகும் அப்படியே காட்சிப்படிமங்களாக பதிந்து வைத்திருப்பதற்காக மட்டக்களப்பு துரைரத்தினம் அண்ணருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள், அரசாங்கத் தரப்பு, இடையில் நின்ற ஆயுதக்குழுக்கள் மற்றும் அரசியல்வாதிகள் என்று அனைத்து தரப்பினர் மீது பக்கசார்பின்றி விமர்சனங்களை முன்வைத்திருப்பது உண்மையில் இன்றைய கால கட்டத்திலாவது மிகவும் தேவையான ஒன்று.

ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு விடயத்தை பேசமுயன்றாலும் அவற்றில் ஒரு தொடர்ச்சியை காணமுடிகிறது. எந்த இடத்திலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க ஒரு கணமும் அவர் தயக்கம் காட்டவில்லை. மட்டக்களப்பு வரலாற்றில் ஒரு கறுப்பு அத்தியாயத்தை ஒரு பொறுப்பு மிக்க செய்தியாளராக அவர் பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார். அவரின் ஒவ்வொரு கட்டுரையிலும், அங்கு பத்திரிகையாளர்கள் உதைபந்து போல அனைத்து கால்களாலும் அடிபட்டு நொந்ததை அழகாக விபரித்திருக்கிறார்.

அவர்களின் கௌரவம் குறையாமல் அவர்களை கையாண்டிருக்கிறார். இந்த நூல் குறித்து பாதகமான விமர்சனங்கள் எதிர்காலத்தில் வரலாம். ஏற்கனவே கூட முன்வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த செய்திகளின் மறுபக்கத்துக்காக உங்களுக்கு தலைவணங்குகிறேன். ஒரு ஊடகனாக.

அன்புடன்

**சீவகன் பூபாலரட்ணம்**

---

# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 19

## மூவின மக்களும் செறிந்து வாழும் தலைநகரில் மூவினத்திலிருந்தும் நகரபிதாக்கள்



களனி கங்கைக்கும் காலிமுகத்தை தழுவும் இந்து சமுத்திரத்தாய்க்கும் மத்தியில் இலங்கையின் தலைநகரமாக மிளிரும் கொழும்பில் மூவின மக்களும் செறிந்து வாழ்கின்றமையால் இங்கு 1865 ஆம் ஆண்டு முதல் தெரிவாகும் நகரபிதாக்களை நினைத்துப்பார்க்கும் போது, சுதந்திரத்திற்கு முன்னர் இங்கு பிரித்தானிய பிரஜைகள் தலைவர்களாகவும் அதன் பின்னர் இலங்கைப் பிரஜைகளான மூவினத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் மேயர்களாகவும் தெரிவாகியிருக்கும் தகவலை அறிந்துகொள்ள முடிகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு, கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது பிறந்த தின கொண்டாட்டங்கள் மிகவும் கோலாகலமாகவும் நடந்திருக்கிறது. பிரித்தானியாவின் ஆளுகைக்குள் இருந்தமையால் இந்த விழாவுக்கு பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக வருகைதந்திருந்தார்.

முன்னைய தொகுதிவாரி தேர்தல் முறையின்போது, கொழும்பு மத்தி - கொழும்பு வடக்கு - கொழும்பு தெற்கு என மூன்று பிரதேசங்களிலுமிருந்து நாடாளுமன்றிற்கு பிரதிநிதிகள் தெரிவாகினர்.

மாநகர சபைத்தேர்தல்களிலும் வட்டார ரீதியில் உறுப்பினர்கள் தெரிவாகினர். நாடாளுமன்றத்திற்கு எம். பி.க்களாகச்சென்ற பலருக்கும் முதலில் கொழும்பு மாநகரசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு தெரிவானதன் பின்னரே நாடாளுமன்ற ஆசனங்களின் கனவுகளும் வந்துள்ளன.



அதற்கு ஏணிப் படியாக அமைந்தது தான் கொழும்பு மாநகர சபை.

பிரித்தானியரான சேர் சார்ள்ஸ் பீட்டர் லெயார்ட் (1806 - 1893) என்பவர் கொழும்பு மாநகர சபை உருவாக்கப்பட்டதும் முதலாவது மாநகரத் தலைவராகத் தெரிவானார். இவரே அக்காலப்பகுதில் கொழும்பு பிரதேசத்தின் அரசாங்க அதிபராகவும் பணியாற்றியவர்.

1866 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரையில் கொழும்பு மாநகரத்தின் தலைவர்களாக பதவிவகித்தவர்கள் அனைவரும் முடிக்குரிய பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பணிப்பின்பேரிலேயே நியமிக்கப்பட்டவர்கள். அதனால் அவர்கள் பிரித்தானிய பிரஜைகளாக விளங்கினார்.

அதன்பின்னர், ரட்ணசோதி சரவணமுத்து என்ற தமிழர்தான் முதல் முதலில் கொழும்பு மாநகரின் நகரபிதாவாக 1937 இல் தெரிவானார். எனினும் இவரது பதவிக்காலம் அதே ஆண்டில், டிசம்பர் மாதம் முடிவுக்கு வந்திருந்தாலும் 1946 ஆம் ஆண்டுவரையில் மாநகர அங்கத்தவராகத்தான் திகழ்ந்தார்.

இவரையடுத்து மருத்துவ கலாநிதி வி. என். சொக்மன் மேயரானார். இவர் அதன்பிறகு செனட்டராகவும் விளங்கியவர். இவரையடுத்து மேயரானவர் ஏ.ஈ. குணசிங்ஹ. இவரையடுத்து மீண்டும் ரட்ணசோதி சரவணமுத்து மேயரானார். ஏ.ஈ. குணசிங்க பின்னாளில் மாநகர சபை உறுப்பினரான ரணசிங்க பிரேமதாசவின் ஆஸ்தான குருநாதர். இவரிடம் அரசியல் பயின்ற பிரேமதாச, காலப்போக்கில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் துணை அமைச்சராகவும் வீடமைப்பு அமைச்சராகவும் பிரதமராகவும் இறுதியில் ஜனாதிபதியாகவும் படிப்படியாக உயர்ந்த இடத்தில் அமர்ந்து முடிசூடாத சக்கரவர்த்தியாகத்திகழ்ந்த அதே மாநகரில் கொல்லப்பட்டார்.

ரட்ணசோதி சரவணமுத்து, ஏ.ஈ. குணசிங்க, ஜோர்ஜ் ஆர்.டீ. சில்வா, ஆர்.ஏ.டீ. மெல், குமரன் ரட்ணம், ருத்ரா, என்.எம். பெரேரா, வி.ஏ. சுகததாச, வின்சன்ட் பெரேரா, ஜபீர் ஏ. காதர், ஏ. எச்.எம். பௌசி, ஸ்ரீசேன குரே, கே. கணேசலிங்கம், கரு ஜயசூரிய, பிரசன்ன குணவர்தனா, ஓமர் காமில், உவைஸ் முகம்மட் இம்தியாஸ், ஏ.ஜே. எம். முஸம்மில் உட்பட சிலர் கொழும்பு மாநகர முதல்வராகினர். இவர்களின் சிலரது பெயர்களில் தலைநகரத்தில் வீதிகளும் அமைந்துள்ளன.

இறுதியாக நடைபெற்ற தேர்தலில் முதல்தடவையாக ஒரு பெண்மணி போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகள் பெற்று முதல் தடவையாக கொழும்பு மாநகர வரலாற்றில் முதல் பெண் மேயர் என்ற பெருமையைப்பெற்றார்.

**ரஸஞானி**

அவர்தான் திருமதி ரோஸி சேனாநாயக்கா. திருமதி அழகுராணியாக 1985 இல் தெரிவானவர்தான் இவர். ரோஸி சார்ந்துள்ள ஐக்கியதேசியகட்சி இம்முறை இத்தேர்தலில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளையும் 60 ஆசனங்களையும் பெற்று தொடர்ந்து கொழும்பு மாநகரசபையை தங்கள் கட்சிக்கு தக்கவைத்துக்கொண்டுள்ளது.

இவர் முன்னர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றியிருப்பவர். இவருடைய குடும்பத்தைச்சேர்ந்த சேனாநாயக்கா என்பவர் முன்னர் இலங்கையில் பொலிஸ்மா அதிபராகவும் இருந்தார்.

இலங்கையில் அரசியலில் பிரவேசிக்கும் எவருக்கும் முதலில் வாசல் திறப்பது கிராம சபை, நகர சபை, பிரதேச சபை, மாவட்ட சபை, மாநகர சபை முதலான அமைப்புகள்தான். அரசியலில் ஈடுபட்ட கணவர்மார் மறைந்ததும் அவ்விடத்திற்கு வந்த மனைவிமாரும் அரசியல் தலைவிகளாகியுள்ளனர்.



பண்டாரநாயக்காவின் திடீர் மறைவையடுத்த அவருடைய மனைவி ஸ்ரீமாவோ உலகின் முதல் பெண் பிரதமராக இலங்கையில் தெரிவானார். இவருக்கு அதற்கு முன்னர் அரசியல் அனுபவம் எதுவும் இருக்கவில்லை. முன்னாள் பிரதமரின் பாரியார் என்ற தகுதி மாத்திரமே இருந்தது. எனினும் அவர் பிரதமரானதும் இலங்கையில் பல முன்னேற்றகரமான மாற்றங்கள் நிகழ்ந்தன.

இலங்கை பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சோஷலிஸ ஜனநாயக குடியரசானதும் இவரது காலத்தில்தான். அத்துடன் அணிசேரா நாடுகளின் தலைவியாகவும் தெரிவானவர். தனது பதவிக்காலத்தில் முதல்தடவையாக இலங்கையில் அணிசேரா நாடுகளின் மாநாட்டையும் முன்னின்று நடத்திப் பெருமை தேடிக்கொண்டவர்.

அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒரு முன்மாதிரியாக இருப்பதுபோன்று உள்ளூராட்சி அரசியலில் ஈடுபட முன்வந்து மேயராகும் தகுதியை பெறவிரும்பும் இலங்கையின் மூவின பெண்களுக்கும் திருமதி ரோஸி சேனாநாயக்கா முன்மாதிரியாகத்திகழுவார்.

(தொடரும்)

# எனது அப்பாவின் அவாவும் "டான்" தொலைக்காட்சியும்

இது கொஞ்சம் சொந்தக் கதைதான். ஆனால், பொது சனத்தொடர்போடு சம்பந்தப்பட்டது. இற்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது. ஆண்டு சரியாக ஞாபகமில்லை. நடந்த இடம் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம்.

அந்த ஆலயத்துக்கு முதன் முதலாக தீர்த்தோற்சவ வேளையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் (அப்போது "றேடியோ சிலோன்") நேரடி அஞ்சலை ஏற்பாடு செய்து கொண்டுவரவேண்டும் என்பது எனது தந்தையார் நல்லையா உடையார் பூபாலரட்ணத்தின் நீண்டநாள் ஆசை அப்போது. வானொலியில் ஆழமான பாசம் கொண்டவர் அவர். மாமாங்கப் பிள்ளையார் மீதும் அதே அளவு பக்தி. பிபிசியில் வேலை செய்த எனக்கு அதில் கால்வாசிகூடக் கிடையாது என்பது வேறுகதை.

அதற்காக இலங்கை வானொலிக்கு விண்ணப்பிக்க, ஏன் மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு நேரடி ஒலிபரப்பு தேவை என்பதை விளக்கும் ஒரு ஆவணத்தை தயாரித்துத் தருமாறு கேட்கப்பட்டதாம். ஆனால், அதற்கு முன்னதாக கொழும்பிலும் யாழ்ப்பாணத்தில் ஆலய விழாக்களுக்கு அப்படி எதுவும் கேட்கப்பட்டதாக தகவல் இல்லை.

அப்பாவுக்கு அப்போது கிடைத்தது ஒரு சைவப் பாடப்புத்தகத்தில் இருந்த மாமாங்கேஸ்வரர் பதிகம் ஒன்றுதான். அதனோடு சில வெள்ளைப் பேப்பர்களையும் ஒரு கோப்பில் எடுத்துக்கொண்டு அங்கு சென்றுள்ளார். அவர்கள் எங்கே ஆவணம் என்று கேட்டுள்ளனர். அவர்கள் நினைப்பு 'மட்டக்களப்பில் என்ன சிறப்போடு ஆலயம் இருந்திருக்கப் போகிறது, ஆகவே இவரால் எதுவும் கொடுக்க முடியாது. ஆகவே நேரடி அஞ்சல் அங்கு தேவையில்லை என்று கூறிவிடலாம்' என்று.

**பூபாலரட்ணம் சீவகன்**

அவர்கள் ஆவணம் கேட்க அப்பா சொன்ன பதில் பின்வருமாறு அமைந்தது. அதாவது 'ஆதாரங்கள் எல்லாம் சேர்த்துவிட்டேன். ஆனால், அதனை ஒரு திட்டமாக



தயாரிக்கத் தெரியவில்லை. ஆகவே நீங்கள் முன்னதாக நல்லூர் அல்லது வேறு ஆலயத்துக்கு கொடுக்கப்பட்ட இப்படியான திட்ட ஆவணத்தை தந்தால் அதனைப்பார்த்து இதனை எழுதி தந்துவிடுகிறேன்' என்றாராம். அவர்களுக்கு உடனே பிடிபட்டுவிட்டது, நமது திருகுதாளம் இவரிடம் எடுபடாது என்று. உடனே அனுமதி தந்துவிட்டார்களாம்.

எனக்கு ஆண்டு தெரியவில்லை. எப்படியோ அப்பா மாமாங்க தீர்த்தத்துக்கு நேரலையை ஒழுங்கு செய்துவிட்டார்.

ஆனாலும் பிரச்சினை தீரவில்லை.

அப்போதெல்லாம் தொலைபேசியின் ஊடாகத்தான் வானொலி நேரலை செய்வார்கள். மாமாங்கத்துக்கு அருகே தொலைபேசி இணைப்பு கிடையாது. பார்வீதியில் தொலைவில் இருந்த வீடு ஒன்றிலிருந்து இணைப்பு எடுத்துவந்து கொடுத்தாலும், தொலைபேசி இணைப்பு நேரத்துக்கு கிடைக்கவில்லை. காலை பத்து மணிமுதல் இணைப்பு இல்லை. 12 மணிக்கு தீர்த்தம். அப்போது அங்கே அருகாகச் சென்ற இருவர், அப்பாவின் தந்தையை குறிப்பிட்டு 'உடையாரின் மக்கள் செய்கிற காரியம் என்றைக்கடா சரியாக வந்தது?' என்று அப்பாவின் காதுபடக் கூறிச் சென்றிருக்கிறார்கள். மனம் வருந்திப்போன அப்பா, ஒரு தேங்காயை வாங்கி மாமாங்கப் பிள்ளையாருக்கு உடைத்திருக்கிறார். உடைந்த தேங்காயின் இளநீர் கண்ணில் பட அதனை வேட்டி மூலையால் துடைத்துவிட்டு நிமிர்ந்தபோது தொலைபேசியை வைத்துக்கொண்டு பொறியாளர் கத்தினாராம், 'இணைப்பு கிடைத்துவிட்டது' என்று.

அப்பா ஆன்மீக நம்பிக்கை அதிகம் கொண்டவர். மாமாங்கப்பிள்ளையார் மீது அதீத பக்தி கொண்டவர். பிள்ளையார்தான் தன்னைக் காப்பாற்றியதாக நம்பினார். அன்று தீர்த்த நிகழ்வின் நேரலை வெற்றிகரமாக முதன் முதலாக நடந்தேறியது.

இன்று அதே மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு மிக அருகில் நேரடியாக தொலைக்காட்சியில் அஞ்சல் செய்ய ஒரு தொலைக்காட்சி நிலையமே வந்துவிட்டது. "டான்" தொலைக்காட்சி அலுவலகம். "டான்" தொலைக்காட்சியை, அப்பாவின் பிரியசகியான அரங்கத்தின் சார்பில் மட்டக்களப்புக்கு வரவேற்கிறேன். "ஆயிரம் பூக்கள் மலரட்டும்".

---




## மலையக மக்களும் அரச பொதுநிர்வாகமும்...



மலைகளை பேசவிடுங்கள் பத்தியில், இதுவரை இரண்டு முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. முதலாவது சுதந்திர இலங்கையில் 1948 ல் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதும் அது பின்னர் கட்டமாக கிடைக்கப்பெற்றதும். இரண்டாவது 1964 ஆம் செய்துகொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் அதனால் லட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டமையும்.

மேற்படி இரண்டு வரலாற்று சம்பவங்களும் இலங்கையில் அன்றைய நிலையில் சுமார் 130 ஆண்டுகள் வாழ்ந்த மக்களை இலங்கையில் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலக்கிவைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகவே அமைகின்றன.

எனவே மலையகத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக குறிகாட்டிகள் நாட்டின் ஏனைய இன சமூகத்தில் இருந்து வேறுபட்டு நிற்பதற்கு இந்த நடவடிக்கைகளே காரணமாகும். இதனால், இலங்கையின் பொது நிர்வாக முறைமையில் இருந்து முற்று முழுதாக விலக்கிவைக்கப்பட்ட மலையக மக்கள், அவர்களின் தொழில் துறையை நிர்வகித்த தோட்ட முகாமைத்துவத்தினாலேயே சமூக பொது நிர்வாக விடயங்களையும் மேற்கொண்டு வந்த, மேற்கொண்டு வருகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில், அத்தகைய சமூக பொது நிர்வாக விடயங்கள் என்ன அவற்றில் இருந்து எப்போது விடுபட்டு இலங்கை அரச பொது நிர்வாக முறைமைக்குள் உள்வாங்கப்பட்டார்கள் அல்லது உள்வாங்கப்படவுள்ளார்கள் என்பது

**மல்லியப்புசந்தி திலகர்**

பற்றியே இந்த வாரம் முதல் "மலைகளை பேசவிடுங்கள்" பந்தி ஆராயவுள்ளது.

**மலையக மக்களும் அரச பொது நிர்வாகமும்:**

இலங்கை வாழ் மலையகத் தமிழ் மக்கள் பெருந்தோட்டப்

பிரதேசத்திலேயே பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இன்றைய திகதியில் அந்த எண்ணிக்கை பத்து லட்சத்தை எட்டுகிறது. எஞ்சிய ஐந்து லட்சத்தினர் பெருந்தோட்ட நிர்வாக எல்லைகளுக்கு வெளியே நகரம், நகரை அண்டிய பகுதிகளிலும் தலைநகரிலும் வாழ்கின்றனர்.

பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்களாக அல்லது தொழிலாளர் அல்லாதவர்களாக (முன்பு தோட்டத் தொழிலாளர்களாக இருந்தவர்கள் அதேபோல இப்போது தோட்டத்தொழிலாளராக வேலை செய்யாது பிற தொழில்களை செய்வோர்) இருக்கும் நிலையில் அவர்களுக்கான அடிப்படைஉரிமைகள் எவ்வாறெல்லாம் விலக்கி வைக்கப்பட்டன என்பதை பின்வருமாறு பட்டியலிடலாம்.

உள்ளூராட்சி நிர்வாகமான கம்சபா (கிராமிய சபை) முறையிலும் பின்னர் அது பிரதேச சபை முறையாக மாற்றப்பட்டபோதும் அதில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படாமை.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பிரித்தானியர் ஆட்சி காலத்தில் அவர்களினால் கட்டப்பட்ட "லைன்" குடியிருப்பு முறையே பேணப்பட்டு வந்துள்ளமை. இதனோடு இணைந்து முறையான கழிவறை வசதிகளும் வழங்கப்படாமை.

நாட்டில் எல்லா மக்களுக்கும் இலவச கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கர அறிமுகம் செய்த அரச இலவச கல்வி கிடைப்பதில் இருந்து இவர்கள் விலக்கி வைக்கப்பட்டமை.

நாட்டில் இலவச சுகாதார முறை அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகையில் இந்த மலையகப் பெருந்தோட்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு அது கிடைக்கப் பெறாமை.

அரச நிர்வாகப் பொறிமுறையான கிராம சேவகர் பிரிவுகள், பிரதேச செயலகங்களின் ஊடான சேவைகளை பெற்றுக் கொள்வதில் இவர்களுக்கு இருந்த தடைகள். பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்த அந்நியராட்சி கால கம்பனிகளும் பின்னர் கூட்டுத்தாபனங்களுமே அவர்களது பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொண்டு வந்தமை. தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் இறுதியில் V என்ற எழுத்து சேர்க்கப்பட்ட நிலையில் மலையகத் தமிழ் மக்களுக்கு X என்ற எழுத்து சேர்க்கப்பட்டு வேறுபடுத்தி வைக்கப்பட்டமை.

பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்களுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுக்காதிருந்த நிலைமை.

பெருந்தோட்டப் பகுதியில் மக்கள் வாழும் பகுதிகளை சென்றடையும் பாதைகளை அமைக்கவோ புனரமைக்கவோ உரிய நிறுவனம் இல்லாமை.

சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கான உரிமையை அந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுக்காமை.

தொழிலாளியாக தாம் வழங்கும் உழைப்புக்கான கூலியைப் பெறுவதற்காக அரசாங்க சட்ட திட்டங்களுக்கு மாறான ஒப்பந்த முறைமைகளுக்குள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளமை.

அடிப்படைத் தொடர்பாடல் முறையான தபால் சேவை கிடைப்பதில் இந்த மக்களுக்கு இருக்கக் கூடிய பாகுபாடு.

இன அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகள் இல்லாமை.

காணியுரிமையைப் பெறுவதற்கு உரிய தடைகள் இப்படியாக சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் மலையகத் தமிழ் மக்கள் ஒரு நாட்டின் பிரஜை என்கின்றதன் அடிப்படையில் தமக்கு கிடைக்கவேண்டிய அடிப்படை உரிமைகளில் இருந்து விலக்கிவைக்கப்பட்ட விடயங்களை பட்டியலிடலாம். இந்த விடயங்களை

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# பட்டறிவு

## பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஜே.ஆர்செய்த ஆட்சிக்கவிழ்ப்புச் சதி

என்.சரவணன்



இலங்கை சுதந்திரம் தொடக்கம் எத்தனையோ ஆட்சி கவிழ்ப்பு சதிகள் அரசியல் ராஜதந்திர மட்டத்திலும், ஆயுதப் போராட்டத்தின் மூலமும் முயற்சி செய்யப்பட்ட வரலாறை நாம் அறிவோம். அது போல மாலைதீவு என்கிற நாட்டையே ஆக்கிரமித்து ஆட்சியை கவிழ்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியும் புளொட் இயக்கத்தால் சரியாக 30 வருடங்களுக்கு முன்னர் (03.11.1988) மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது இங்கு சொல்லும் கதை சுதந்திரத்திற்கும் முற்பட்ட கதை.

இரண்டாம் உலக யுத்தம் (1939-1945) உலக வரைபடத்தையே திசைதிருப்பிப் போட்டதுடன் அந்த யுத்தம் ஏற்படுத்திய பாரிய சர்வதேச அரசியல் உறவுகளின் திருப்புமுனையையும் நாம் அறிந்திருக்கிறோம்.

யுத்தத்தில் பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் உலக அளவில் தன் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இருந்த நாடுகளை இந்த யுத்தக் களத்தில் இறக்கியது. காலனித்துவ நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட படையினர் பொதுநலவாய இராணுவத்தின் பெயரின் கீழ்தான் இணைக்கப்பட்டார்கள். பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் தலைவியாக அப்போது பிரித்தானிய அரசி எலிசபத் மகாராணி இருந்தார்.

இலங்கையில் இருந்தும் கரிசன் இலங்கை பீரங்கிப் படை (Ceylon Garrison Artillery (CGA)), இலங்கை பாதுகாப்புப் படை (Ceylon Defence Force (CDF)) இலங்கை காலாட் படை (Ceylon Light Infantry -CLI), இலங்கை தொண்டர் வைத்தியப் பிரிவு (Ceylon Volunteer Medical Corps) என்பன ஆரம்பிக்கப்பட்டு வெவ்வேறு நாடுகளில் போரிலும், பாதுகாப்பிலும் இறக்கப்பட்டன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருக்கின்ற கோகோஸ் தீவுகளில் கடமையில் அமர்த்தப்பட்டிருந்த இலங்கை கரிசன் பீரங்கிப் படை அங்கிருந்த பிரித்தானிய படையினருக்கு எதிரான ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தது. அந்தக் கிளர்ச்சி ஒரு வகை இராணுவ ஆட்சி கவிழ்ப்பு சதிக்கான ஒரு தொடக்கமாக கருதப்பட்டது.

எவ்வாறாயினும் இறுதியில் அந்த சதிமுயற்சி முறியடிக்கப்பட்டு அதில் சம்பந்தப்பட்ட இலங்கைப் படையினர் பலர் பிரித்தானிய விசேட நீதிமன்றத்தினால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு கொல்லப்பட்டார்கள். இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் இராணுவத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரே இராணுவ சதி முயற்சியாக இந்த சம்பவம் பதிவானது.

### ஜப்பானின் பலம்

1941 டிசம்பர் ஜப்பான் அமெரிக்காவின் பேர்ல் துறைமுகத்தை தாக்கி பலத்த சேதத்தை உண்டுபண்ணியதோடு பசுபிக் மற்றும் ஆசிய பிராந்தியங்களில் தனது ஆக்கிரமிப்பையும் செல்வாக்கையும் வேகப்படுத்தியது. அதே டிசம்பர் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங்கில் போர் தொடுத்து அதையும் கைப்பற்றியது.

1942 பெப்ரவரியில் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்த சிங்கப்பூரையும் கைப்பற்றுகிறது. பிரித்தானியா இவற்றை பெருத்த தோல்விகளாக கருதியது. 2ஆம் உலக யுத்தத்தில் அது மிகவும் மோசமானதொரு தோல்வி என்று அன்றைய பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் வெளிப்படையாக கருத்து வெளியிட்டார்.

அதே பெப்ரவரியில் ஜாவா தீவுகளில் ஜப்பான் மேற்கொண்ட தாக்குதல் பிரித்தானியாவுக்கும் அதன் நேச நாட்டுப் படைகளுக்கும் அதிக இழப்பை ஏற்படுத்தியிருந்தது. ஜப்பானிய தற்கொலைப்படைகள் நடத்திய விமானத் தாக்குதலின் மூலம் பல போர்க்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

அதே ஆண்டு ஏப்ரலில் பிரிட்டிஷ் காலனித்துவ நாடான நமது இலங்கையின் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் பிரித்தானிய போர்க்கப்பல்கள் அழித்து மூழ்கடிக்கப்பட்டன.

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ஜப்பான், ஜேர்மன் போன்ற நாடுகளின் ஆதரவுடன் இந்திய தேசிய இராணுவத்தை (INA) அமைத்து அவர்களுடன் சேர்ந்து பிரித்தானியாவுக்கு எதிரான போரில் இந்திய வீரர்களை களமிறக்கியிருந்த தருணம் அது.

### ஜே.ஆரின் வகிபாகம்?

இப்படிப்பட்ட பின்னணியில் தான் இலங்கையின் அரசியலில் அன்று தீவிர செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சிவில் குழுக்கள் மத்தியில் பிரித்தானியாவிடமிருந்து இலங்கையை விடுவிக்க ஜப்பானால் உதவ முடியும் என்கிற கருத்து தலைதூக்கியது. அதற்கான முயற்சிகளிலும் இறங்குகிறார்கள். இந்த காலப்பகுதியில் இளம் அரசியல் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜப்பான் ராஜதந்திரிகளுடன் தொடர்புகொள்கிறார். ஆனால் இந்த முயற்சியை முதிர்ந்த தலைவரும் பிரிட்டிஷ் விசுவாசியுமான டீ.எஸ். சேனநாயக்க எதிர்க்கிறார். ஜே.ஆருக்கு புத்திமதி கூறித் தடுத்தார். ஜே.ஆருடன் சேர்ந்து டீ.எஸ்.சேனநாயக்கவின் மகன் டட்லியும் இந்த சதியில் சம்பந்தப்பட்டு இருந்ததாக பிற்காலத்தில் அவுஸ்திரேலிய இராணுவ சஞ்சிகை (The Indian Connection at the AWM - Nr.97) ஒன்று தெரிவிக்கிறது.

“கோகோஸ் தீவுகள்” ஜப்பானின் போர் நடவடிக்கைகளை கண்காணித்து, எதிர்க்கும் கேந்திர அரணாக பிரித்தானியாவுக்கு இருந்துவந்தது. அருகில் இருந்த நாடு என்கிற வகையில் அங்கு இலங்கையில் இருந்து கரிசன் பீரங்கிப் படையை உதவிக்காக ஈடுபடுத்தியிருந்தது.

### ஜப்பான் நம்மை விடுவிக்கும்

அங்கு பிரிட்டிஸ் கப்டன் ஜோர்ஜ் காடினர் என்பவரின் தலைமையில் இலங்கைப் படையினர் 56 பேர் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். இலங்கைப் படையைச் சேர்ந்த பொம்படியர் கிரேசன் பெர்னாண்டோ என்பவரின் தலைமையில் அந்த தீவை ஜப்பான் இராணுவம் கைப்பற்றுவதற்கான சதிகளை செய்கிறார்கள். அதற்காக 08.05.1942 ஆம் திகதியை நிர்ணயிக்கிறார்கள். கிரேசன் பெர்னாண்டோவுக்கு ஆதரவாக இலங்கைப் படையினர் 30 பேர் தமது ஆதரவை தெரிவித்திருக்கிறார்கள்.

முதற்கட்டமாக அங்கிருந்த பிரித்தானிய கட்டளைத் தளபதிகள் இருவரை கைது செய்து, அவர்களின் மூலம் அங்கிருக்கும் ஏனைய படையினரை நிராயுதபாணிகளாக்கி அவற்றை கைப்பற்றுவதே திட்டம்.

அதன் பின்னர் இந்து சமுத்திரத்தில் இத்தீவுக்கு சற்று தொலைவில் இருந்த கிறிஸ்மஸ் தீவை அப்போது மார்ச் 3 அன்று ஜப்பான் கைப்பற்றியிருந்தது. ஆக கோகோஸ் தீவு கைப்பற்றப்பட்டதும் ஜப்பான் படையினருக்கு சமிக்ஞை கொடுப்பதன் மூலம் ஜப்பானை வரவழைத்து ஒப்படைப்பது, அதன் பின்னர் ஜப்பானின் உதவியின் மூலம் இலங்கையை பிரித்தானியாவிடமிருந்து விடுவிப்பது என்பதே திட்டம்.

### தோல்வியில் முடிந்த புரட்சி

ஆனால் மார்ச் 8 ஆம் திகதி முதல் கட்ட நடவடிக்கையின் போது இரண்டு தரப்புக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை நீடிக்கிறது. சரியான இலக்கை தாக்கமுடியாது போனமையாலும், தானியங்கி துப்பாக்கிகள் சரியாக தொழிற்படாததாலும் அந்த சண்டை தோல்வியில் முடிகிறது. இலங்கைப் படையினரான சமாரிஸ் ஜயசேகர என்பவரும் அங்கு கொல்லப்படுகிறார். பிரித்தானிய படையினரும் காயமுற்றனர்.

கிளர்ச்சி தோல்வியுற்ற நிலையில் கிரேசன் பெர்னாண்டோ தலைமையிலான குழு சரணடைந்தது. கொழும்பில் வைத்துத் தான் சரணடைவும் விலங்கிடப்படலும் நிகழ வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை விதித்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. சிலவேளை அவர்கள் உரை நிகழ்த்தி தேசபக்தர்களாக காட்ட முயற்சிப்பார்கள் என்று பிரிட்டிஷ் அரசு கருதியிருக்கக் கூடும். அவர்கள் அனைவரும் இலங்கைக்கு கைதிகளாக அனுப்பப்பட்டார்கள்.



சமாரிஸ் ஜயசேகர உள்ளிட்ட ஏழு பேருக்கு கோகோஸ் தீவிலேயே மரணதண்டனை வழங்கப்பட்டு மே 10 அன்று இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஏனையோருக்கு மன்னிப்பு வழங்கும்படி அன்றைய சிங்கள அரசியல்வாதிகள் பலர் பிரித்தானியாவைக் கோரியபோதும் அன்றைய ஆளுநர் சேர் அன்ரூ கல்டேகொட் (Sir Andrew Caldecott) அக்கோரிக்கையை நிராகரித்தார். கிரேசன் பெர்னாண்டோ தனக்கான மன்னிப்பு முயற்சியை நிராகரித்தார். கிரேசன் லங்கா சமசமாஜ கட்சியைச் சேர்ந்த தேசபக்தர்.

இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் 1942 ஓகஸ்ட் மாதம் மூன்று வெவ்வேறு தினங்களில் கிரேசன் பெர்னாண்டோ (ஓகஸ்ட் 5), கார்லோ ஒகஸ்டின், பெனி த சில்வா ஆகியோர் வெலிக்கடை சிறைச்சாலையில் தூக்கிட்டு கொல்லப்பட்டார்கள். அக்கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட மேலும் 7 பேருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரித்தானியாவுக்கு எதிரான பொதுமக்களின் மனவுணர்வு மேலும் மோசமடைந்தது. அன்று சிவில் பாதுகாப்பு ஆணையாளராக இருந்த சேர் ஒலிவர் குணதிலக்க இந்த விவகாரத்தைக் கையாண்ட போது தன்னை அன்றைய பிரித்தானிய தளபதியாக இருந்த சேர் கொப்றி லேய்ட்டன் (Sir Geoffrey Layton) “கறுப்புத் தேவடியா மகன்” (Black bastard) என்று திட்டியதை முறையிட்டிருக்கிறார்.

இக்கிளர்ச்சியின் பின்னணியில் அவர்களைத் தூண்டிவிட்ட அல்லது அவர்களை பின்னணியில் இருந்து இயக்கிய அரசியல் தலைவர்கள், சக்திகள் யார் என்பது பற்றி அப்போது பகிரங்கமாக உண்மைகள் எதுவும் வெளிவரவில்லை.

ஆனால் பிற்காலத்தில் அப்பேர்பட்ட ஒரு ராஜதந்திர சதியில் ஜப்பானுடன் ஜே.ஆர். ஈடுபட்டிருந்தார் என்கிற உண்மைகள் வெளிவந்தன. பல இடங்களிலும் பதிவாயின. அதுபோல ஜப்பானுக்கு ஜே.ஆர் செய்த இன்னோர் மகத்தான உதவிக்காக இன்றும் ஜப்பானிய மக்கள் ஜே.ஆரை வணங்குகிறார்கள்.

ஜே.ஆரின் நினைவு இல்லம், சிலை என்றெல்லாம் அங்கு வைத்திருக்கிறார்கள். அதனை தனியாக அடுத்த வாரம் பார்ப்போம்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 24

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையின் கீழான 2000 ஆம் ஆண்டில் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்றம் ஒரு வருடம் முடிந்த பின்னர் ஜனாதிபதியினால் கலைக்கப்பெற்று 2001ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் நாள் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தப் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப் , ரெலோ இணைந்த வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான "தமிழ் தேசியக் கூட்டமைப்பு" தமிழர் விடுதலைக்கூட்டணியின் "உதயசூரியன்" சின்னத்தின் கீழ், வடக்குக் கிழக்கில் போட்டியிட்டது. இத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில், உதயசூரியன் சின்னப் பட்டியலில் நிறுத்தப்பட்ட அ. சந்திரநேரு அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவர் தமிழரசுவாதியும், அக்கரைப்பற்று தெற்கு(திருக்கோவில்) கிராமசபையின் முன்னாள் தலைவருமான அமரர் "அறப்போர்" அரியநாயகத்தின் மூத்தபுதல்வராவார். இவர் இந்தப்பந்தி எழுத்தாளருக்கு நெருங்கிய நண்பருமாவார். அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தின் மாவட்ட இணைப்பாளரான இப்பத்தி எழுத்தாளர், இத்தேர்தல் காலத்தில் லண்டன் சென்றிருந்தபோதிலும், அவரது ஆலோசனைக்கிணங்க அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தினரும் இப்பந்தி எழுத்தாளரின் ஆதரவாளர்களும் சந்திரநேருவை ஆதரித்தே பிரச்சாரம் செய்தனர்.

ஆனால், அத்தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரநேரு பின்னர் மாவை சேனாதிராசாவின் சொல்லைக்கேட்டு, அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தினரை புறக்கணிக்கத் தொடங்கினார். 1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தன்னை எதிர்த்து இப்பந்தியாளர் தலைமையில் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கச் சுயேச்சைக்குழு போட்டியிட்டமையாலும், பின்னர் 2000ஆம் பொதுத்தேர்தலில் மீண்டும் தம்மை எதிர்த்து தமிழர் மகாசங்க சுயேச்சைக்குழு போட்டியிட்டமை மாத்திரமல்லாமல், இப்பத்தி எழுத்தாளரால் தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பு மனு அம்பாறை மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்டமையினாலும், எப்போதும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தின் மீது ஆத்திரம் கொண்டவராகவே மாவை சேனாதிராசா இருந்தார். அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் என்பது அம்பாறை மாவட்ட தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களுக்காகக் கட்சி அரசியலுக்கு அப்பால் செயற்பட்ட அமைப்பு என்பதை மனம்கொள்ளாது, மாவை சேனாதிராசாவும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தை வேண்டாப் பொருளாக நடத்தியதாலும், மகாசங்கத்தின் செயற்பாடுகள் உறங்குநிலைக்குச் சென்றன. தங்கள் கட்சி அரசியல் நன்மைகளுக்காகவும் தனிநபர் நன்மைக்காகவும் இதனை இவர்கள் இருவரும் செய்தனர். இதனால், காத்திரமாக இயங்கிய இவ்வமைப்பு, பின்னால் காணாமல் போனது.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் காலத்தில் நடந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஸ்ரப் அவர்களின் அகால மரணத்தின் பின்னர், சற்று அடங்கிப்போன, தென்கிழக்கு தனி முஸ்லிம் மாகாணக் கோரிக்கை, பின்னர் 2001இல் கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையாக மறுவடிவம் எடுத்தது.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை தேர்தல் தொகுதியை நீக்கி மீதியாக உள்ள பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கியதாகவே உத்தேச தென்கிழக்கு அலகு - தனி முஸ்லிம் மாகாணம்- அமைந்திருந்தது. இந்தக் கரையோர மாவட்டக் கோரிக்கையும் அவ்வாறே பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கியதாகவே இருந்தது.

தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையை என்ன காரணங்களுக்காக அம்பாறை மாவட்ட தமிழர்கள் எதிர்க்க வேண்டியிருந்ததோ அதே காரணங்களுக்காகவே இந்த கரையோர மாவட்டக் கோரிக்கையையும் எதிர்க்க வேண்டியிருந்தது.

ஏனெனில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளாக விளங்கும் பொத்துவில் வடக்கு(கோமாரி) பிரதேசச் செயலாளர் பிரிவு, கல்முனை வடக்கு தமிழ் பிரதேசச் செயலாளர் பிரிவு(தரமுயர்த்தல்) மற்றும் சம்மாந்துறை (மல்வத்தை) பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய நிருவாக அலகுகளுடன் இந்த நிருவாக அலகுகளை அடிப்படையாகக் கொண்ட, தனியான உள்ளூராட்சி அலகுகளையும்(பிரதேச சபைகள்) ஏற்படுத்திக்கொள்ளும் வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஆதரவு வழங்க முடியாது.

அன்றியும் இனப்பிரச்சினைக்கான தீர்வாக குறைந்தபட்சம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் அதிகாரப்பகிர்வு அலகு எட்டப்படும் வரை - அது எட்டப்படாமல் - அம்பாறை

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

மாவட்டத்தில் மேற்கூறப்பட்ட தனியான கரையோர மாவட்டம் அமைவது அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்புக்கு மிக ஆபத்தானது.

இந்த ஆபத்தை புரியாமலும் அல்லது அதனை புரிந்தும் அதில் அக்கறை கொள்ளாமலுந்தான் தமிழரசுக்கட்சியின் தொடர்ச்சியான அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணியும் அதன் இன்னுமொரு தொடர்ச்சியான இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நடந்து கொண்டது / நடந்து கொள்கிறது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# தேனகத்தில் மின்னிய தென்னகத்து நட்சத்திரங்கள்

01. 1950ம் ஆண்டு கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன் அவரது மனைவி நடிகை மதுரம் நடிகர் வி.கே.ராமசாமி ஆகியோர் தங்கள் குழுவினரோடு வருகை தந்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வெட்டவெளியரங்கில் "பணம்"என்னும் நாடகமொன்றை தந்திருந்தனர்.

02.குமாரி சச்சு: காசின்னத்துரை அவர்கள் நடாத்திவந்த 'கல்கிபீடி'' கம்பெனியின் அழைப்பையேற்று, 1965ம் ஆண்டு முற்பகுதியில் நடிகை குமாரி சச்சு அவர்களும் அவரின் நடனக் குழுவினரும் மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்துக்கு வருகை தந்து, நடன நிகழ்சிகளை "கல்கிபீடி"ஸ்தாபனத்தாரின் ஆதரவில் இலவசமாக வழங்கினர்.

அந்நிகழ்ச்சியில்.



*01. "அம்மம்மா காற்று வந்து ஆடை தொட்டுப் பாடும்."*

02. கண்ணன் என்னும் மன்னன் பேரைச் சொல்லச் சொல்ல."போன்ற பாடல்களுக்கும் குமாரி சச்சு நடன விருந்தளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*03. எம்.ஜி.ஆர் -- சரோஜாதேவி:*

1965ம் ஆண்டு அக்டோபர் மாதம் 'தினபதி; சிந்தாமணி, சுந்தரி, தந்தி, ராதா போன்ற பத்திரிகைகளைத் தந்த சுயாதீன பத்திரிகை சமாசம் என்ற பெரிய நிறுவனத்தின் அழைப்பையேற்று மட்டக்களப்புக்கு வருகைதந்து, முற்றவெளி மைதானத்தில் மகிழ்ச்சிக்குரிய ஓர் கூட்டம் இடம் பெற்றது. அக் கூட்டத்தில் அன்றைய மட்டுநகர் முதல் பிரதிநிதி சொல்லின் செல்வன் இராஜதுரை அவர்களின் தலைமையின் கீழ் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களும் அபிநயசரஸ்வதி சரோஜாதேவியும் யோசேப் பரராஜசிங்கமும் உரையாற்றினார்கள். அன்று மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்தில் ஒன்று கூடிய மக்கள் வெள்ளம்போல் இன்றுவரை ஒன்று கூடவில்லை என்பதை யாரும் மறக்கமுடியாது. அன்றுகூடிய கூட்டத்தின் நெருக்கடியில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தும் போனார்.

*04. கே.ஏ.தங்கவேல் -- எம்.சரோஜா:*

1967ம் ஆண்டு டணால் கே.ஏ.தங்கவேல் அவரின் மனைவி நடிகை எம்.சரோஜா சகிதம் அவர்களின் நாடகக்குழுவோடு மட்டுநகருக்கு விஜயம் செய்து அர்ச் மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் "அவசரக்கலியாணம்'' என்னும் நகைச்சுவை நாடகத்தை நடாத்தினர். இக்குழுவினர் திருமலைவீதியில் அமைந்திருந்த "ஹோட்டல் ஓரியன்ட்" என்னும் விடுதியில் தங்கியிருந்தனர். அதேவேளை பயனியர் வீதியில் உள்ள அமரர் வேதாரணியம் அவர்களின் வீட்டிலும் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*05. எஸ்.எஸ்.ஆர் -- விஜயகுமாரி*

1968ல் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் நடிகை விஜயகுமாரி ஆகியோர் வருகைதந்து "ஹோட்டல் ஓரியன்ரில்" தங்கி, அர்ச் மிக்கேல் கல்லூரியின் மண்டபத்தில் வில்லுப்பாட்டு நிகழ்சியொன்றை நிகழ்த்தினர். நிகழ்ச்சி முடிந்த மறுநாள் சர்வசாதாரணமாக மட்டுநகர் பசார் வீதியில் அமைந்திருந்த "குயின்ஸ் டெக்ஸ்ரைல்ஸ்" புடவைக் கடைக்கும் பிரதானவீதி, முனைவீதி போன்ற தெருக்களிலும் உலா வந்தார்கள்.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா ஜேபி**

*06. சுமதி:*

நடிகை சுமதி 1981ம் ஆண்டு "பாதைமாறிய பருவங்கள்" என்னும் படப்பிடிப்புக்காக படக்குழுவினரோடு மட்டக்களப்பில் "லேடிமெனிங் டிறைவ்" என்னும் வீதியில் 65ம் இலக்க வீட்டில் தங்கியிருந்தார். அங்கு குழுமிய ரசிகர்கள், "சரோஜா குப்பையா கொட்டுறா'' எனக்கலாய்து தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். இவ்வசனம் சுவரில்லாத சித்திரங்கள் திரைப்படத்தில் கவுண்டமணி சுமதியைப் பார்த்து பேசும் வசனமாகும்.

பாதைமாறிய பருவங்கள் திரைப்படம் தேனகத்தில் மாமாங்க தீர்த்தக் குளமருகிலும் படப்பிடிப்பு நடைபெற்றது. இத் திரைப்படத்தின் கதை வசனத்தை மட்டக்களப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற இரா.பத்மநாதன் அவர்கள் எழுதியிருந்தார்கள்.



*07. வெண்ணிறஆடை நிர்மலா:*

விபுலாநந்தா இசைக் நடனக் கல்லூரியின் திறப்பு விழாவுக்கு நடிகை வெண்ணிறஆடை நிர்மலா இந்துசமய தமிழ் கலை கலாசார அமைச்சர் செ.இராஜதுரை அவர்களின் அழைப்பை ஏற்று தன் நடனக்குழுவினரோடு வருகை தந்து சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தினார்.

*08.ப்ஜெய்சங்கர் நாகேஸ்:*

அமரர் டொக்டர் வின்சன்ட் அவர்களின் அழைப்பையேற்று தேனகத்துக்கு விஜயம் செய்திருந்த நடிகர்கள் ஜெய்சங்கர், நாகேஸ் இருவரும் மட்/அர்ச் மிக்கேல் கல்லூரியில் நாடகம் ஒன்றை தந்திருந்தனர்.

பின் திருமலை வீதியில் இருந்த எஸ்.ஏ.செல்வநாயகம் அவர்களின் வீட்டில் (தற்போது ராகவி புடவைக் கடை) தங்கியிருந்தனர்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## கழிவில் உருவாகும் கற்பனைத்திறன்

‘மாணவர்களுக்கேற்ற கல்விமுறைமை இலங்கையில் நடைமுறையிலிருந்திருந்தால், இலங்கைநாட்டிலும் கண்டுபிடிப்பாளர்கள் பலர் உருவாகியிருப்பர். சிறையிலே அடைக்கப்பட்டதான வகுப்பறை ஒன்றில் மாணவர்களின் விருப்பத்திற்கேற்றால் போலல்லாது, ஆசிரியர்களின், அதிகாரிகளின் அசைவுகளுக்குப் பயந்து மாணவர்கள் கதிரைகளுக்கு சூடேற்றுகின்ற, தாயோடு, உறவினரோடு இருந்து ஆனந்தமடைய வேண்டிய வயதில் பாலர் பாடசாலைகளிலும் அடைத்து, நீ இந்தப் பதவியைத்தான் பெறவேண்டுமென்ற திணிப்பினை சிறுவயதியிலே தூண்டிவிட்டு, பிள்ளையின் விருப்பத்தினை நிறைவேற்ற முடியாத புத்தகக் கல்விமுறையினால், மதிப்பெண்களுக்கு பயந்து, மகிழ்ச்சிகளை இழந்து வாடுகின்ற கல்விமுறை நீங்கி, பிள்ளைக்கு ஆர்வமுள்ள அனுபவக்கற்றலை வழங்குவதற்கான சூழல் இலங்கைநாட்டில் உள்ள கிராமப்புறங்களில் எப்போது, உருவாகுமோ? அன்றுதான் ஒளிந்திருக்கும் விஞ்ஞானிகளும், ஆக்கத்திறன், கலைத்திறனாளிகளும் பாடசாலைப் பருவத்தில் இருந்தே உருவாவர். அதுவரைக்கும், பாடசாலைகளிலிருந்து பெரும்பான்மையான புத்தகப்பூச்சுக்களே வெளிவருவர்.’ என பட்டிப்பளை சந்தியில் நின்று பேரின்பமும் மாணிக்கவாசகமும் பேசிக்கொண்டனர்.



**படுவான் பாலகன்**

கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்கள் பலருக்கு, ஆக்கத்திறன்சார் வெளிப்பாடுகளை செய்வதற்கும், புதிய விடயங்களை கண்டுபிடிப்பதற்கும் ஆர்வமுள்ள போதிலும், அவற்றினை செய்து பார்ப்பதற்கான பொருட்கள் இன்மையினாலும், அவ்வாறு சிறுபொருளைக்கூட செய்தால் அதனை ஊக்குப்படுத்துவதற்கும், பாராட்டுவதற்குமான நபர்கள் இன்மை. அதேவேளை அவற்றினை செய்தால் 'தேவையில்லா வேலை' ஏன் செய்கின்றாய் என கூறுகின்ற, அவற்றினை தட்டிக்கழிக்கின்ற சமூகப் போக்கினால் எதனையும் எடுத்துப்பார்த்து செய்வதற்குகூட பிள்ளைகள் விரும்பாதவர்களாக உள்ளனர்.

‘முயற்சியுடைய மாணவர்களை தட்டிக்கொடுப்பதற்கு சகலரும் முனைய வேண்டும். பாராட்டுக்களையும் வழங்க



வேண்டும்’ எனக்கூறிய பேரின்பம், கொக்கட்டிச்சோலை கிராமத்தில் வசிக்கின்ற வரகுணசிங்கம் லோகீசன் தொடர்பில் கூறவிளைந்தான். கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றினை எதிர்பார்த்து வீட்டிலே காத்துக்கொண்டிருக்கின்ற குறித்த மாணவன், தனது பொழுதினை பெறுமதிமிக்கதாக கழிக்க வேண்டுமென்ற அவாவில், கழிவுப்பொருட்களைக் கொண்டு உருவங்களை, பொருட்களை செய்துவருகின்றான். பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் பொம்மை ஒன்றினைச் செய்துதருமாறு தன்னிடம் கேட்டதற்கமைய பொம்மையொன்றினை செய்துகொடுத்த லோகீசன், இதே போன்று கழிவுப்பொருட்களை பயன்படுத்தி நாமும், உருவங்களை, பொருட்களை செய்யலாம் என்ற சிந்தனையில் எறும்பு ஒன்றினை சிரட்டைகளையும், சிறுகம்புகளையும் பயன்படுத்தி செய்யும் பணியினை ஆரம்பித்துள்ளான். ஒருநாள் காலை 08மணிக்கு ஆரம்பித்த குறித்த மாணவனின் பணி இரவு 09 மணிவரை தொடர்ந்திருக்கின்றது. இரவு 09 மணிக்குதான் தான் எடுத்த பணியை நிறைவு செய்து வெற்றிகண்டிருக்கின்றான். அதுவரைக்கும் அன்றைய நாள் மதிய உணவினையும் லோகீசன் உண்டிருக்கவில்லையென்கிறான். இவ்வாறு செய்து முடித்ததன் பின்பு, தாயிடம் காண்பித்த போது, தாயும், அவனது சகோதரர்களும் அவனுக்கு



பாராட்டினையும் தெரிவித்திருக்கின்றனர். இப்பாராட்டின் எதிரொலி இன்னமும் சில பொருட்களை செய்வதற்கு தூண்டியிருக்கின்றது. தூண்டுதலின் விளைவாலும், பெற்றோரின் தட்டிக்கொடுப்பினாலும் வண்டு, பாத்திரம் போன்றவைகளையும் செய்திருக்கின்றான், இன்னமும் செய்து கொண்டு வருகின்றான். இவற்றினை செய்வதற்கு எவ்வித இயந்திரங்களையோ, நவீன உபகரணங்களையோ பயன்படுத்தியதில்லை. வீட்டுசூழலில் கிடைத்த உபகரணங்களின் உதவியுடனே பொருட்களை செய்துவருகின்றான்.

பொலித்தீன் பாவனைகளை முற்றாக நிறுத்துவதற்கு, அதற்கு இணையான பொருட்களை கழிவுப்பொருட்களில் இருந்து செய்ய வேண்டும், கழிவுப்பொருட்கள் பாவனைப்பொருட்களாக மாறவேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் லோகீசன், தனக்கென உபகரணங்களும், பொருட்களும் கிடைக்கும்பட்சத்தில் இன்னும் பல பொருட்களை தன்னால் உருவாக்கமுடியுமென்ற உறுதிதன்மையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றான். இம்மாணவனைப் போன்ற மாணவர்கள் பலரும் வெளிச்சத்திற்கு வராமல் இருளிலே மறைந்துள்ளனர். அவர்களையும் வெளிச்சத்திற்கு கொண்டுவரவேண்டுமெனக்கூறி அவர்கள் அவ்விடத்தினைவிட்டு அகன்றனர்.

## ஒரு பன்றியின் சிலையும் பல இக்கரைமாடுகளும்



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் தேரோட்டம் கடந்தமாதம்இடம்பெற்றது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அக்கோவிலுக்கு அடிக்கடி செல்வதுவழமைதான்என்றாலும், உற்சவத்தில் இதுவரைபங்கு பற்றியதில்லை. இவ்வாண்டுஎப்படியும் தவிர்ப்பதில்லை என்றதிட்டத்துடன் கடந்த செப்டம்பர் 27 வியாழக்கிழமை கோவிலுக்குப் புறப்பட்டேன்.

கோவிலுக்குள் நுழைந்ததுமே வாசலில்கம்பீரமாக நின்ற இருதேர்களும் கவனத்தைக் கவர்ந்தன. அந்தத்தேர்களைப் பற்றி, ஆரையம்பதியைச்சேர்ந்தநண்பரும்ஆய்வாளருமான திரு.சொ.பிரசாத்ஏற்கனவேசொல்லியிருக்கிறார். பழைமைவாய்ந்தஅத்தேர்களின் சிற்பங்கள் அறியாமையால் ஆண்டுக்காண்டு இழக்கப்பட்டு வருகின்றனஎன்பதையும், அந்தச் சிற்பங்களைஆவணப்படுத்துவது அவசியம்என்றும்குறிப்பிட்டிருந்தார். கொக்கட்டிச்சோலைத்தேர்களிலுள்ள சிற்பங்கள் பற்றி, ஆலயத்தின் 1998 குடமுழுக்கின் போதுவெளியானசிறப்புமலரான“தேரோட்டத்தில்” கிழக்குப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்தகலைவாணிகந்தசாமியால் எழுதப்பட்ட அருமையானகட்டுரையையும் முன்பு படித்திருந்தேன். எனவே ஆர்வம்தூண்டதேர்களைநெருங்கிஅவதானிக்கத் தொடங்கினேன்.

முதலில் பிள்ளையார்தேரைநெருங்கிப் பார்த்தேன். இப்போதுதேரிலுள்ள வேலைப்பாடுகள் பலஎளிமையானவை, கலை நுணுக்கங்கள்குறைவானவை. தேரின்பழையசிற்பங்களின் கதி என்னஆயிற்றுஎன்றுதெரியவில்லை. குடமுழுக்கு மலரில்வெளியான கட்டுரைக்கும் தேரிலுள்ள சிற்பங்களுக்குமிடையேநிறையவேறுபாடுகள் இருந்ததைக் காணக்கூடியதாகஇருந்தது. சித்திரத்தேர் என்றுஅழைக்கப்படும் பெரிய தேரைநெருங்கினேன். கைபேசிவெளிச்சத்தில் கண்ட முதலாவதுசிற்பமேஅதிர்ச்சியை ஊட்டியது. சைவநெறியில்மிகஅரிதாகக்கூறப்படும் சிவ வடிவம்அது. சிவனின்வராகஅவதாரம்!

பாடசாலையில் சைவநெறி படித்த எல்லாருக்குமே "சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை" தெரியும். வேடன் தாய்ப்பன்றியைக் கொன்றுவிட, அதன் குட்டிகள் பசியில் அழுவதைக் கண்டு இரங்கி ஈசன் தாய்ப்பன்றி உருவில் வந்து பால்கொடுக்கின்றான். சிவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் ஒன்றாகப் பதிவான கதை இது. மணிவாசகரும் இச்சம்பவத்தை "ஏனக்குருளைக்கருளினை போற்றி" (ஏனம் + குருளை = பன்றி +குட்டி) என்று போற்றித்திருவகவலில் பாடியிருக்கிறார். இந்தக்கதை, சைவமரபில் இறைவன் தாயுமானவன் என்பதையும், அவன் அளப்பருங்கருணையையும் சுட்டிக்காட்டச் சொல்லப்படும் இரண்டு கதைகளில் ஒன்று. (மற்றையது, ஏழைக் கர்ப்பிணி ஒருத்திக்கு ஈசனே அவளது தாயின் வடிவில் வந்து பிரசவம் பார்த்த கதை).

சிவனின் அறுபத்துநான்குதிருவிளையாடல்களில் ஒன்றாகச்சொல்லப்படும் இக்கதை, மிகஅரிதாகவேசிவாலயங்களில் இடம் பிடித்திருக்கிறது. பாண்டியநாட்டு

**வி.துலாஞ்சனன்**

மதுரையிலும் திருப்பரங்குன்றத்திலும் உள்ள "ஏனக்குருளைக்கருளி" சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. அறியாமையால் இவை தற்போது ‘வராகி அம்மன்' என்று பக்தர்களால் வழிபடப்படுகின்றன. இந்தவடிவில், திருமாலின் வராகஅவதாரம்போல, மாந்தவுருவகப் பன்றியாக (anthropomorphic) ஈசன் சித்தரிக்கப்படுவதே சிறப்பு. கொக்கட்டிச்சோலையிலுள்ள இந்தவடிவமும்பன்றி முகமும் மனித உடலும்கொண்டிருந்தது. நான்கு

தொடர்ச்சி... (பக்கம் -14 )


NIRUTHA
UK Hotline: +447850927964
Email: info@hotelniruthа.com
Visit: www.hotelnirutha.com
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
E-mail: info@hotelnirutha.com
Hotline+94 717412292
அரங்கம் செய்திகளுக்கான
ஆதரவில் கைகோர்ப்போம்' -
ஹொட்டல் நிருத்தா


Now Enrolling
NCL
NELSON COLLEGE LONDON
Are you 18+
CALL US
Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239
FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk
EMAIL US
info@nelsoncollege.ac.uk
IN PARTNERSHIP WITH
LONDON
METROPOLITAN
UNIVERSITY
Pearson

# மட்டு மாநகரசபை

## கழிவு அகற்றுவதில் மக்களின் ஒத்துழைப்பும், விழிப்புணர்வும் தேவை



மட்டக்களப்பு மாநகரசபை கழிவகற்றலில் பல சிரமங்களை எதிர்கொள்கிறது என்பது அதன் நிர்வாகத்தின் கருத்து.

75.06 சதுர மைல் பரப்பளவுள்ள மட்டக்களப்பு மாநகர சபை எல்லை வீதிகள், உள்வீதிகள் என 320 கிலோமீற்றர் வீதிகள் அடங்கலாக 40,000 அலகுகளை கொண்டது. அதாவது வீடுகள், காணிகள் மற்றும் கடைகள் என்பனவே அலகுகளாலும். இவற்றில் 96,000 மக்கள் வசிக்கிறார்கள். ஆகவே இந்த ஒவ்வொரு அலகிலும் கழிவகற்றலை மாநகர சபை மேற்கொண்டாக வேண்டும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்கிறார் மாநகர சபையின் துணை ஆணையாளர் தனஞ்செயன்.



அதில் ஒன்று கழிவுகளை அவை உருவாகும் இடத்திலேயே தரம்பிரித்தல் ஆகும். அதனை பொதுமக்கள்தான் செய்தாக வேண்டும். அதாவது உக்கக்கூடிய கழிவுகள், உக்காத கழிவுகள் என பிரித்தாக வேண்டும்.

அவற்றை ஒரு சீரான முறையில் செய்தாக வேண்டும்.

அதனை அடுத்த நடவடிக்கைதான் மாநகரசபையால் மேற்கொள்ளப் படுகின்றது. அதாவது அவற்றை மாநகரசபை சேகரித்தாக வேண்டும். இந்த செயற்பாடு கடினமானது. இதற்கு பெருமளவு ஆளணி, இயந்திரங்கள் தேவைப்படுகிறது. எனவே இங்குதான் மக்களுக்கு

விழிப்புணர்வு தேவைப்படுகிறது. கழிவகற்றல் மாநகரசபையின் வேலை மாத்திரமல்ல. அது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும் என்கிறார் தனஞ்செயன்.

இந்த விழிப்புணர்வானது மட்டு மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் மக்களுக்கு மாத்திரம் பொருந்தாது. அனவரும் இந்த விழிப்புணர்வை பெற்றாகவேண்டும். பயணம் செய்யும் போதுசாலைகளில் கழிவுகளை வீசுவதை நிறுத்த வேண்டும். குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும். இப்படியாக பல விடயங்களில் பொதுமக்கள் பொறுப்பிடன் நடந்துகொள்ள வேண்டும்.

மாநகரசபை அட்டவணையின்படி கழிவகற்றலை மேற்கொள்ளுகிறது.

எனவே பொதுமக்கள் அதற்கமைய கழிவுகளை வழங்கி ஒத்துழைப்பைவழங்கவேண்டும். கழிவுகளை அவ்வாறு செய்யாமல் வீதியில் வீசுதல் எமது மட்டு

நகரைத்தான் அசிங்கப்படுத்துகின்றது. வேலைக்குச் செல்பவர்கள் கழிவுகளை அவர்கள் இல்லாத போது

வழங்குவதற்கு ஏதாவது மாற்றுவழியை அவர்களது வசதிக்கு ஏற்ப செய்ய வேண்டும்

கழிவகற்றலுக்கு பயன்படுத்தும் வாகனத்தட்டுப்பாடு காரணமாக சில

முகாமைத்துவ சிக்கல்கள் இருக்கின்ற போதிலும் நாங்கள் அதை

**லியோண்**

சமாளிக்கின்றோம் என்கிறார் தனஞ்செயன். நாள் ஒன்றுக்கு 21 வாகனங்கள் தேவைப்படுகின்றன. ஆனால்

தம்மிடம் 15 வாகனங்கள் தான் சீராக இயங்குகின்றன என்கிறார் அவர். இப்படியாக சபையின் தேவைகளையும் அவர் விபரித்தார்.

## திசவீரசிங்கம் சதுக்கம் - மேற்கு 4ம் குறுக்கு வீதியின் அவலநிலை



'மாற்றம் என்பது மட்டும்தான் மாறாதது' என்பதற்கு விதிவிலக்காக அமைவது எமது திசவீரசிங்கம் சதுக்கம் - மேற்கு 4ம் குறுக்கு வீதிதான். எமது வீதி கடந்த 10வருடங்களுக்கு மேலாக எவ்விதமான முன்னேற்றமுமின்றி இருப்பது வீதியின் அதிஸ்டமா? அல்லது எங்களது அதிஸ்டமா? என்பதனை அறியமுடியாமல் நாம் இருக்கிறோம்.

எங்கள் வீதியில் இருப்பவர்கள் அதிகளவில் கையொப்பம் இட்டது எமது வீதியை திருத்துமாறு கோரப்பட்ட கடிதங்களுக்குத்தான். எமது கோரிக்கைக் கடிதங்களை பெற்றுக்கொண்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள், அமைப்பாளர்கள் போன்றவர்கள் மாற்றமடைந்தார்கள் ஆனால் வீதியின் நிலையில் மாற்றமேற்படவேவில்லை.

எமது வீதியின் அடுத்த அதிசயம் என்னவென்றால் வீதிக்கு ஒழுங்கான பெயர் இன்னும் இடப்படவில்லை. ஒரு தடவை 3ம் குறுக்கு என்றும், இன்னுமோர் தடவை 4ம் குறுக்கு என்றும் மாற்றம் அடைகின்றது. எனவே அதற்கு ஒரு நிரந்தரமான பெயர் வைக்கவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் அதிகமான வீதிகள் பெயர் இல்லாமல் காணப்படுவதும் திருத்தியமைக்கப்படவேண்டும்.

எதிர்வரும் காலம் மழைக்காலம். வீதி ஒழுங்காக அமையப்பெறாமை மற்றும் வடிகால் அமைக்கப்படாததன் காரணத்தினால் வெள்ளநீர் வீதியில் தேங்கியிருந்து பல்வேறு துயரங்களை ஏற்படுத்தும்.

எங்கள் தெருவில் வந்துபோனால், வாகனங்களுக்கு உடனடியாக டயரில் ஒரு துவாரமாவது வந்துவிடும். நேரடியாக டயர் கடைக்கு பச் போடப் போகவேண்டியதுதான். மழைவந்துவிட்டு ஏனைய தெருக்கள் எல்லாம் காய்ந்துபோனாலும், எங்கள் வீதியில் சகதி குறையாது. புதிதாக வந்து போகும் வாகனக்காரகள் திட்டிவிட்டுத்தான் போவார்கள்.

பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு கல்லும் முள்ளும் நிறைந்த பாதை. பள்ளமும் திட்டியும் நிறைந்த பாதை என்பதற்கு உதாரணமாக எங்கள் தெருவை பள்ளி ஆசிரியர்கள் கல்விச்சுற்றுலா கொண்டுவந்து காட்டலாம்.

எனவே இது தொடர்பில் பல இடங்களில் அறிவித்தும் பயன் கிடைக்கபெறவில்லை என்பதனால் அரங்கம் செய்தியாளின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபைக்கு அறிவிக்கின்றேன்.

ஆதிரா,
திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு
மட்டக்களப்பு



## ஏசியா பவுண்டேசன் ஆதரவில் புகைப்படக்கண்காட்சி



**லியோண்**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின்

அனுசரணையுடன் மட்டக்களப்பு மாநகரசபையினால் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

ஒக்டோபர் 19ம், 20ஆம் திகதிகளில் நடை பெற்ற இக்கண்காட்சியில் பலதரப்பட்ட புகைப்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

பொதுமக்களையும் சுற்றுலாப் பயணிகளையும் இவை வெகுவாக கவர்ந்ததாக கண்காட்சியில் கலந்துகொண்ட பலர் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு வாழ் புகைப்படக் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**




# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் – 1

**மட்டக்களப்பு கலாசாரத்தின் வேராக இருக்கின்ற ஆகமம் சார வழிபாட்டு முறை(சடங்குகள்) எந்த அளவுக்கு இங்குள்ள கலைகளோடு தொடர்புபட்டிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் தொடர் இது. அடுத்து வரும் பல வாரங்களுக்கு பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களின் கைவண்ணத்தில் அவை ஒளிரும். --ஆசிரியர்--**

**சடங்குகள்**

சடங்குகளினடியாகவே கலைகள் பிறக்கின்றன என்பது அறிஞர் கருத்து. இதுபற்றி Jane Ellen Harrison Bib நூலில் ஆராய்ந்து நிறுவியுள்ளார்.

ஆரம்பத்தில் உணவு தேடுதலுக்காகச் செய்யப்பட்ட இச் சடங்குகள் பின்னர் சமயத் தன்மை பெற்றுச் சமயச் சடங்குகிளாகின்றன.

கலைகளுள் ஒன்றானதும், சகல கலைகளும் சங்கமிப்பதுமான நாடகத்தின் வித்துக்களையும் இச்சமயச் சடங்குகளிலேதான் காணமுடியும்.

எனவே மட்டக்களப்பு பிரதேச மக்களிடையே காணப்படும் சமயச் சடங்குகளை ஆராய்வதன் மூலம் மட்டக்களப்பு மரபு வழி, நாடகங்களின் மூலங்களைக் கண்டு கொள்ள முடியும்.


**இந்துமதம் சடங்குகள் சார்ந்தது.** பிறந்தது தொடக்கம் இறப்பது வரை இந்து மனிதனின் வாழ்வில் மதச்சடங்குகள் முக்கிய இடம் பெறுகின்றன.

சைவ சித்தாந்தம் அல்லது வேதாந்தம் நீண்ட கால நோக்கில் ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டினாலும் அன்றாடக் கஷ்டங்களிலிருந்து தப்ப, நோய், வாழ்க்கைப் பிரச்சனைகளான நடைமுறைத் துயரங்களினின்று மீள கிராமியச் சமயம்தான் கிராமிய மக்களுக்கு உதவுகிறது.

இந்த நோய் நொடிகளை ஏவுகிற சக்திகளையும் ஆவிகளையும் வசியம் பண்ணுவதன் மூலம் தமக்கு வரும் நோய்களைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையைக் கிராமிய சமயம் தருகிறது.

'கிராமியக் கோயில்களும், கிராமியச் சமயமும் கிராம மக்களின் தொழில், வாழ்க்கை முறைகள் என்பனவற்றிற் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை Rural Sociology of India எனும் ஆய்வு நூலில் A.R. தேசாய் விரிவாகக் கூறுகிறார்.

மனித வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தவை உணவும் இனப் பெருக்கமுமாகும். உணவைத் தேடுதல் அவனது பிரதான முயற்சியாக இருந்தது.


ANCIENT ART AND RITUAL

BY

JANE ELLEN HARRISON
LL.D., D.LITT.
AUTHOR OF "PRIMITIVE ATHENS," "RELIGION OF ANCIENT GREECE," "PROLEGOMENA TO THE STUDY OF GREEK RELIGION," ETC.

NEW YORK
HENRY HOLT AND COMPANY
LONDON
WILLIAMS AND NORGATE

பிள்ளைகளுக்கும் தனக்கும் நோய் வராமற் பாதுகாத்தல் அவனது அடுத்த முயற்சியாக இருந்தது.

உணவைத் தேடவும், நோயைத் தடுக்கவும் அக்காலத்தில் அவன் தனக்கு மிஞ்சிய இயற்கைச் சக்திகளையே நம்பினான். ஆடுதல்பாடுதல் மூலமும், சில சடங்குகளை நடத்துதல் மூலமும் அச் சக்திகளை வசப்படுத்தி வாழ்வு நடத்தலாம் என மனிதன் நம்பினான். வளர்ச்சிபெறாத சமூகக் குழுக்களில் இவ் வணக்க முறையை இன்றும் காணலாம்

விஞ்ஞானயுகமான இன்றும், மட்டக்களப்பின் சில சாதியினரிடத்தே பண்டைய வணக்க முறைகள் இருப்பதனைக் காணுகிறோம்.

இவர்களின் வணக்க முறைகளை மேற்குறிப்பிட்ட ஒரு வகைக்குள் அடக்கிவிடலாம்.
ஒன்று உணவு தேடுதலை அடிப்படையாகக் கொண்டது.மற்றது நோய்கள் வரக்கூடாது எனத் தெய்வங்களை வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டது.

மட்டக்களப்பு இன்னும் பாரம்பரிய அமைப்பு முற்றாகச் சிதையாத ஒரு பிரதேசமாகும்.

புராதன குலக்குழு வணக்க முறைகளையும், நிலமானிய அமைப்பினடியாக எழுந்த கிராமிய வணக்க முறைகளையும், வளர்ச்சியடைந்த ஆகம வணக்க முறைகளையும் அது கொண்டுள்ளது.

(தொடரும்)

# மூதாதையரின் காலடிகள்

## குச்சவெளி

குளக்கோட்ட மன்னன் காலத்தில் இப் பிரதேசத்தில் வளரும் தர்ப்பைப் புல்லை கொண்டு கூர்ச்சம் செய்து கோணேசர் கோயில் திருப்பணிக்கு அனுப்பி வைத்ததாகவும் அதுவே அவர்கள் திருப்பணியாக இருந்ததாகவும் அதனாலேயே கூர்ச்ச வெளி என்பது திரிபடைந்து குச்சவெளி ஆனதாக பண்டிதர் வடிவேல் அவர்கள் தன் திருகோணமலைத் திருக்கோயில் என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார்.

திருகோணமலையிலிருந்து 33 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தமிழ் கிராமம் குச்சவெளி. திருகோணமலையின் கேந்திர வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்களில் குச்சவெளியும் ஒன்று. முன்னர் கட்டுக்குளப்பற்று என அறியப்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பண்டைய நாட்களில் ஒரு துறைமுகமாக இருந்தமைக்கான சான்றுகளை இங்கு கிடைக்கப்பெற்ற பழங்கல் வெட்டுக்கள் நிருபிக்கின்றன. பல்லவராட்சிக் காலத்தில் இங்கு நேரடியாகவே கப்பல்கள் வந்து போனதற்கான வரலாற்று ஆதாரங்களைக் கொண்டுள்ளமை உட்பட ஈழத் தமிழர் வரலாற்றின் முக்கிய செய்திகளை குச்சவெளி நமக்கு தந்து நிற்கிறது.

பண்டைய துறைமுகமாக முன்னர் குச்சவெளியோடு இணைந்திருந்த புடவைக்கட்டு இருந்திருக்கிறது. 'பல்லவ



யக்கா ' என்று அழைக்கப்படும் பல்லவக் கப்பல்கள் இங்கு வந்து போனமை பற்றியதான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. கல் வெட்டின் வாசகங்களின் படி இந்தத் துறைமுகம் 'பத்துவா காட்டு' என அழைக்கப்பட்டிருக்கிறது. அதுவே பின்னாளில் திரிந்து புடவக்கட்டாய் மாறியிருக்கிறது. பல்லவ-யாக்கா என்பது பல்லவர்களின் கப்பல்களாகும்.

பல்லவ மன்னர்களின் வழியாக மகாயான பௌத்த செல்வாக்கு இங்கு பரவுவதற்கும் அவர்கள் பாணியிலான பாறைச் சிற்பங்களும் கல்வெட்டுக்களும் இங்கு கடலுக்கருகே குன்றோரமாக கால் பதித்துள்ளமை குச்சவெளியின் பெருமையை சொல்லி நிற்கிறது.

1981 ஆம் ஆண்டில் புல்மோட்டனையிலுள்ள இல்மனைட்டிற்காக வெட்டப்பட்ட நீளமான நீர்த்தேக்கங்களில், வளையம் கிணறுகள் உட்பட, ஒரு பழங்கால குடியேற்றத்தளத்தின் விரிவான தொல்பொருள் இடங்கள் காணப்பட்டன. அவை இல்மனைட்டுக்காக அழிக்கப்படமையால் பல வரலாற்று தடங்கள் அழிந்து போயின. குச்சவெளியின் தமிழர் வரலாற்றை மேலும் வலியுறுத்தும் விதமாக அமைந்திருப்பது செம்பீஸ்வரர் ஆலயம். அதனைச் சூழ உள்ள வரலாற்று சுவடுகளாக நம் மூதாதையரின் சுவடுகளாக பதிந்திருக்கும் கற்சுனையும் கல்லிலான படிக்கட்டுக்களும் அதன் வழியே அமைதிருக்கும் பழமையான லிங்கமும் சிதைந்து போன கோயிலும் ஒரு நாகரிகத்தின் எச்ச சொச்சங்களாக நம் அடையாளத்தை பேசி நிற்கின்றன.

புராதன கோணேசர் கோயிலின் கோணேசர் கல்வெட்டு வழமைகளுக்கு உட்பட்ட நெறிமுறைகள் சார்ந்து சமூக அடையாளத்தை பேணும் கோணேசர் கல்வெட்டு கலாசாரத்தோடு தொடர்புபட்டு நிற்கிறது.

குச்சவெளியில் தொண்டீஸ்வரம் எனும் கோயில் இருந்ததாகவும் அங்கு பல தமிழ் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவை இன்று புதை பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் உள்ளன. குச்சவெளியை அண்டியுள்ள காட்டுப் பகுதியில் இரண்டாயிரம் வருசங்களுக்கு முந்திய நடுகற்களின் தன்மையை ஒத்த நாற்பத்தி மூன்று கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை தமிழர்களின் தொன்மையான அடையாளங்கள்.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்



குச்சவெளிப் பிள்ளையார் கோயில் பற்றிய கதை மிக சுவாரஸ்யம் மிக்கது.

'காட்டில் வாழ்ந்த வேடர்கள் நிலத்தில் கிழங்கு கிண்டும் போது நிலத்தினடியில் ஒரு கல்லில் ஆயுதம் பட்டு, அக்கல்லில் இரத்தம் சொட்டுவதை கண்டு, ஊர்த் தலைவரிடம் கூறி நிலத்தை அகழ்வித்த போது, ஒரு பிள்ளையார் திருவுருவம் கிடைத்தது. அதன் பின் குச்சவெளி மக்கள் அரச மரத்தடியில் வைத்து பூசை செய்வித்து வந்தார்கள். இது பல நூறு வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததாக முதியவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசமரம் இன்னும் இருக்கிறது.

திரு.காசிநாதர் என்பவருடைய காலத்தில் இது கற்கோவிலாகக் கட்டப்பட்டது. இப்பொழுது இந்தப் பரம்பரையின் ஏழாவது தலைமுறையினரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. பரிபாலனசபையை அமைத்து நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். தற்போது சித்தி விநாயகர் கோவிலில் உச்சி காலம், மாலைச் சந்தியாகிய ஆகிய இரண்டு காலப்பூசைகளும் கும்பாபிஷேகத்தை முதல் நாளாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவமும் பிள்ளையார் கதையும் கந்தசஷ்டியும் திருவாதிரையும், ஆவணிச் சதுர்த்தியும் சிவராத்திரியும் சித்திரா

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# விளையாட்டு

## மட்டு நகரின் கால்பந்தாட்டத்தில் பிரகாசித்த மேனன்



மட்டு நகரின் கால்பந்தாட்டத்துறையில் பிரகாசித்து, அமரர்களான வீரர்களுள் முக்கியமான ஒருவராக மேனன் என அழைக்கப்பட்ட திரு.சி.யோகதாஸ் அவர்கள் விளங்கினார். மட்டக்களப்பு சின்ன உப்போடையில் பிறந்து வளர்ந்த இவர், சீலாமுனையில் வாழ்ந்தவர்.

1980, 90 களில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் இவர் முக்கிய வீரராக பிரகாசித்தார். இக் கால கட்டத்தில் மட்டு நகரில் முன்னிலையிலிருந்த புனித அந்தோனியார் கழகத்திலும் பின்னர் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்திலும் முக்கியமான பின்கள வீரராக களமாடினார். இதன் காரணமாக தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணியில் இடம்பெற்றார்.

மேனன் அவர்கள் விளையாடிய மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி தேசிய விளையாட்டு விழாவில் கால்பந்தாட்டத்தில் வெற்றி பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தேசிய ரீதியில் மட்டக்களப்பிற்குப் பெருமை சேர்த்ததன் காரணத்தினால் மட்டு மாநகர சபையில் தொழில் வாய்ப்பினையும் இவர் பெற்றுக் கொண்டார்.

எதிரணிகளின் முன்கள வீரர்கள் பந்தினை கோல் கம்பத்தை நோக்கி நகர்த்துவதற்கு மிகுந்த சவால் விடும் பின்கள வீரராக இவர் திகழ்ந்தார். இதன் காரணமாக கால் பந்தாட்ட இரசிகர்களின் மனங்களைக் கொள்ளை கொண்ட வீரராக வாழ்ந்தார்.

1990 களில் கால்பந்தாட்டத்தை இரசித்த இளந்தலைமுறையினரில் பெருமளவானவரை ஆகர்சித்த வீரராகவும் மேனன் காணப்பட்டார். இதற்கு இவருடைய கால்பந்தாட்டத் திறனுடன், இவருடைய உடல் கட்டமைப்பின் தோற்றமும் காரணமாக அமைந்திருந்தது எனலாம். மேனன் அவர்களுடைய உடல்வாகு ஒரு விளையாட்டு வீரனுக்குரிய வகையில் இயல்பாகவே அமைந்திருந்ததுடன் இந்த உடலமைப்பினைப் பேணிக் கொள்வதில் இவர் ஆர்வங்காட்டியதாலும் இவருடைய தோற்றம் பிறரைக் கவரும் விதத்தில் காணப்பட்டது.

இத்துடன் மேனன் அவர்கள் தான் விளையாடிய நாட்களில் புகைத்தலினை வெறுத்து ஒதுக்கிய வீரராகக் காணப்பட்டார். புகை பிடிப்பது ஒரு வீரனின் உடல் வலுவைப் பாழாக்கி விடும் என்பதை அடிக்கடி ஞாகப்படுத்தியதுடன் தனது சக வீரர்களிடமும் அதனைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்துவார்.

மேனன் ஒரு பிரபலமான வீரராக மாத்திரம் வாழ்ந்து விட்டுப் போகவில்லை மாறாக தான் பிறந்து வாழ்ந்த பிரதேசத்தில் ஒரு கால்பந்தாட்டப் பாரம்பரியத்திற்கு களம் அமைத்துக் கொடுத்துவிட்டே சென்றுள்ளார். இன்று மட்டு நகரின் கால்பந்தாட்டத்தில் முன்னிலையில் விளங்கும் கழகங்களுள் ஒன்றான யங்ஸ்டார் கழகம் இவருடைய பங்களிப்பில் வளர்ந்த கழகம் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று யங்ஸ்டார் கழகத்தில் விளையாடும் சிரேஸ்ட வீரர்கள் பலரும் மேனன் அவர்களின் பயிற்சினூடாக வளர்ந்தவர்கள்.

மேனன் அவர்கள் கால்பந்தாட்ட மத்தியஸ்தராகவும் கடமையாற்றி கிராம மட்டத்தில் சிறந்த கால்பந்தாட்டம் வளர பணி புரிந்தவர். கால்பந்தாட்டத்தின் ஆரம்பப் பாடசாலையாக விளங்கிய உள்ளூர் அணிக்கு 7 பேர் கொண்ட போட்டிகளில் சிறந்த நடுவராக பணியாற்றி நல்ல கால்பந்தாட்ட வீரர்கள் முகிழ்க்க வழிபுரிந்தார்.

இவ்வாறு தனது வாழ் நாளில் மட்டு நகரின் கால் பந்தாட்டத்தை விருத்தி செய்த வீரனாகிய அமரர் மேனன் அவர்களை ஞாபகத்திற் கொள்ளுவோம்.

## டான் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிச் சமர் ஞாயிறு



டான் வெற்றிக் கிண்ணத்திற்காக மூன்றாவது தடவையாக நடத்தப்படும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் மட்டு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் அரசடித் தீவு விக்னேஸ்வரா அணியும் ஏறாவூர் இளந்தாரகை அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## கல்முனை ஏற்றியன் கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டி!



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை நியுஸ்டார் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடாத்திவரும் "ஏற்றியன் கிண்ண" மென்பந்துகிரிக்கட் சுற்றுப்போட்டி கல்முனை கிஷா ஸ்ருடியோ ஆதரவில் (14) ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகியது. அணிக்கு 11பேர்கொண்ட இந்த 10ஓவர் மென்பந்துக்கிரிக்கட் சுற்றுப்போட்டியில் 24 கழகங்கள் கலந்துகொள்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் வரை தொடர்ந்து விடுமுறை தினங்களில் இச்சுற்றுப்போட்டி நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற முதல்போட்டியில் கல்முனை துளிர் கழகமும் ஈகிள் கழகமும் மோதின.

கழகத்தலைவர் நதுஜிந்தர் தலைமையில் நடைபெற்ற முதல்நாள் அங்குரார்ப்பண நிகழ்வில் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், திருமதி வி.செலஸ்ரினா றாகல், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, கட்டடஒப்பந்தகாரர் லொயிட்ஹென்றிக், கடைஉரிமையாளர் எ.நிமலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## காரைதீவு பிரதேச செயலக சிறுவர் விளையாட்டு விழா !






(காரைதீவு நிருபர் சகா)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான விளையாட்டு விழா கமு/ விபுலானந்தா மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 23.10.2018 ம் திகதி, காரைதீவு பிரதேச செயலாளர் திரு.வே.ஜெகதீஸன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. விவேகானந்தராஜா அவர்களும் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## அதிவேகமாக பத்தாயிரம் ஓட்டங்களை குவித்த கோலி





விசாகப்பட்டினத்தில் இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையே கடந்த புதன்கிழமை நடைபெற்று வரும் இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணித்தலைவர் விராட் கோலி 10 ஆயிரம் ரன்களை விரைவாக கடந்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

கடந்த 2001-ஆம் ஆண்டில் ஒருநாள் போட்டிகளில் 10,000 ரன்களை கடந்த சச்சின் டெண்டுல்கர், 259 இன்னிங்ஸ்களில் அந்த சாதனையை படைத்தார். விராட் கோலி 205 இன்னிங்ஸ்களில் அந்த சாதனையை படைத்துள்ளார்.

இந்த நிலையில் இன்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ரோகித் சர்மாவின் விக்கெட்டை சொற்ப ரன்களில் இழந்தது.

பின்னர் களமிறங்கிய கோலி தனது தனது ஒருநாள் போட்டி வரலாற்றில் 10,000 ரன்களை கடந்தார். 100 ரன்களை கடந்து அவர் தொடர்ந்து களத்தில் உள்ளார்.

இதுவரை சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்தியாவின் தரப்பில் சச்சின் டெண்டுல்கர், சவுரவ் கங்குலி, ராகுல் டிராவிட் மற்றும் தோனி ஆகியோர் 10,000 ரன்கள் எடுத்துள்ளனர்.

இதேபோல் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக அதிக ரன்கள் குவித்த இந்திய வீரர் என்ற பெருமையை கோலி பெற்றுள்ளார்.

இதுவரை ஒருநாள் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக சச்சின் டெண்டுல்கர் மொத்தம் 1573 ரன்கள் குவித்திருந்தார்.

இன்றைய போட்டியில் கோலி அந்த சாதனையையும் முறியடித்தார்.

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# கலித்தொகை இன்பம்

## மன்னவன் செய்த மாபெரும் தவறு!

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணைக் காண்கிறான். அவளைக் கண்டதுமே அவனக்குப் பித்துப் பிடித்ததுபோல இருக்கிறது. அவள் அவ்வளவு அழகாக இருக்கிறாள். "அடடா! இப்படியொரு அழகா? இத்தனை வசீகரமான பெண்களும் இந்த உலகிலே இருக்கிறார்களா? இவ்வளவு காலமும் நான் இப்படியொருத்தியைக் காணவேயில்லையே" என்று மலைத்து நிற்கிறான். எப்படியாவது இவளை அடைய முயல்வோம்" என்று நினைக்கிறான். மெல்ல அவளருகே சென்று பேச்சுக் கொடுக்கிறான்.

"மானே! மயிலே! என் மனதைக் கவர்ந்த அழகியே! உன்னைப் போன்ற அழகி வீட்டைவிட்டு ஊருக்குள் வந்தால் பலரின் உயிர் போய் விடுமே. அத்தனை அழகாக இருக்கிறாயே! வெளியே நீ வரலாமா? என்போன்றவருக்கு வேதனையைத் தரலாமா?" என்று அவளிடம் துணிந்து பேசுகிறான். அவளோ எதுவுமே பதில் சொல்லாமல் ஏளனப் பார்வையொன்றை வீசிவிட்டுப் அவனைக் கடந்து தன்வழியே செல்கிறாள். அவன் தொடர்ந்து சென்று பேசுகிறான். அவளது அழகை அங்கம் அங்கமாக வர்ணித்து, அவளுக்கு மகிழ்ச்சியூட்ட முனைகின்றான். ஆனால் அவள் வாய் திறப்பதாகவே இல்லை. கடைசியாக இப்படிச் சொல்கிறான்:

"நானும் எவ்வளவோ கூறினேன். நீ எதுவுமே பேசாமல் இருக்கிறாய்? இறுதியாக ஒன்று சொல்கிறேன். இதை மட்டும் கேட்டுக்கொள். நீ வீட்டைவிட்டு மற்றவர்கள் காணும்படி வெளியே வந்து பலரைக்கலங்க அடிக்கிறாயே! அப்படி வெளியே வந்தது உனது தவறல்ல. அப்படியானால் அது யாருடைய தவறு? உன்னை வெளியே வர அனுமதித்தார்களே உனது பெற்றோர், அவர்களது தவறா? இல்லையில்லை, அவர்களின் தவறும் இல்லை. இது யாருடையதவறு தெரியுமா? சொல்கிறேன் கேள். நீ வெளியே வரும்போது உனக்கு முன்னால் மக்களுக்கு அபாயத்தைத் தெரிவிக்கு முகமாகப் பறையடிப்பவர்களைப் பறையறைந்து போகச் செய்யவேண்டும் என்று இந்த நாட்டு மன்னன் கட்டளையிட்டிருக்க வேண்டும். அப்படிக் கட்டளையிடாத அந்த மன்னன்தான் குற்றவாளி. நீயல்ல. உன்பெற்றோருமல்ல" என்று சொல்கிறான். இந்தக்காட்சியைத் தருகின்ற பாடல் ஒன்று கலித்தொகையில் வருகின்றது.

பாடல்:

ஊர்க்கால் நிவந்த பொதும்பருள், நீர்க்கால் கொழுநிழல் ஞாழல் முதிர் இணர் கொண்டு

கழும முடித்துக் கண்கூடுகூழை

சுவல்மிசைத் தாதொடு தாழ, அகல்மதி

தீங்கதிர் விட்டதுபோல, முகன் அமர்ந்து

ஈங்கே வருவாள் இவள்யார் கொல்? ஆங்கே ஒர்

வல்லவன் தைஇய பாவைகொல்? நல்லார்

உறுப்பெலாங் கொண்டு, இயற்றியாள் கொல்? வெறுப்பினால்

வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம் கொல்? ஆண்டார்

கடிது, இவளைக் காவார் விடுதல் கொடிஇயல்

பல்கலைச் சிலபூங் கலிங்கத்தள் ஈங்கு இதோர்

நல்கூர்ந்தார் செல்வ மகள்

இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து

நல்லாய்! கேள்

ஆய்தூவி அனம்என, அணிமயில் பெடைஎனத்

தூதுணம் புறவுஎனத். துதைந்தநின் எழில்நலம்

மாதர்கொள் மான்நோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்

பேதுறூஉம் என்பதை அறிதியொ? அறியாயோ?

நுணங்கு அமைத் திரள்என, நுண்இழை அணைஎன

முழங்குநீர்ப் புணைஎன, அமைந்தநின் தடமென்தோள்

வணங்கு இறை வால்எயிற்று அம்நல்லாய்! நிற்கண்டார்க்கு

அணங்கு ஆகும் என்பதை அறிதியோ? அறியாயோ?

முதிர்கோங்கின் முகைஎன முகம்செய்த குரும்பைஎனப்

பெயல்துளி முகிழ்எனப், பெருத்தநின் இளமுலை

மயிர் வார்ந்த வரிமுன்கை மடநல்லாய்! நிற்கண்டார்

உயிர்வாங்கும் என்பதை உணர்தியோ? உணராயோ?

எனவாங்கு,

பேதுற்றாய்போலப் பிறர்எவ்வம் நீ அறியாய்

யாதொன்றும் வாய்வாளாது இறந்துஈவாய்! கேள் இனி

நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப்

போதரவிட்ட நுமரும், தவறிலர்

நிறைஅழி கொல்யானை நீர்க்க விட்டாங்குப்

'பறை அறைந் தல்லது செல்லற்க' என்னா

இறையே தவறுடையான்

(கலித்தொகை, குறிஞ்சிக்கலி பாடல் இல: 20 பாடியவர்: கபிலர்)

இதன் நேரடிக் கருத்து:

புத்தம் புதுக் கொன்றை மலரைத் தலைஉச்சியிலே சூடிக்கொண்டு, தலை மயிரையும் மலரையும், பிணைத்துப் பின்னிய கூந்தல் தோள்களிலே அழகாக வீழ்ந்து கிடக்க, ஒளிவீசுகின்ற முழு மதியைப்போலப் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருக்கும்; முகத்துடன் இங்கே வந்துகொண்டிருக்கும் இவள் யாரோ?



வல்லவன் ஒருவன் செய்து உயிர் ஊட்டி மண்ணில் உலவ விட்ட பொற் பாவையோ? சிறந்த பெண்களின் உறுப்புக்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டிச் சமைக்கப்பட்ட பெண்ணோ? தனது உண்மையான தோற்றத்திலே வெறுப்படைந்த கூற்றுவன் ஆண்களின் உயிர்களைப் பறிக்க நினைத்து இப்படி அழகான உருவத்தை எடுத்து வந்தானோ? இப்படிப்பட்ட அழகிய பெண்ணைப் பெற்றோர் வீட்டிலே பூட்டி வைத்திருக்க வேண்டாமா? இவளை வெளியே உலவ விடுவது எவ்வளவு கொடுமையானது? பலவிதங்களில் கோர்த்து அமைக்கப்பட்ட மேகலை இடையிலே தவழ, பூக்கரையிடப்பட்ட ஆடையை அணிந்துகொண்டு மெல்லிய கொடியைப்போல அசைந்து வருகிறாளே! இவள் நெடுங்காலம் பிள்ளையில்லாமல் இருந்த பெற்றோருக்கு அருமையாகப் பிறந்த ஒரேயொரு செல்வ மகளோ? இவளோடு பேசிப் பார்த்து இவளது தகைமையையும் காண்பேன்.

மானைப்போலக் கண்டவரை மயக்கும் கண்களைக் கொண்டவளே! அன்னம் போன்ற உன் நடையழகும், மயிலைப் போன்ற உன் ஒயிலான தோற்றமும், புறாவைப் போன்ற இளமை ததும்பும் உனது பேரழகும் உன்னைக் கண்டவரை மயக்கி அழித்துவிடும் என்பதை நீ அறிவாயா? இல்லை அறியமாட்டாயா?

அழகான வளைந்த முன்கையினைக் கொண்டவளே! வெண்மையான பற்களைக் கொண்டவளே! நிறத்திலும் திரட்சியிலும் மூங்கிலைப் போன்றும், மென்மையில் பட்டுத் தலையணையைப் போன்றும் உள்ள உனது தோள்கள் காமக் கடலைக் கடப்பதற்கான தெப்பத்தைப் போல உள்ளன. ஆனால் அவை மற்றவர்க்கு வேதனையைக் கொடுக்கின்றன என்பதை நீ அறிவாயோ? இல்லை அறியமாட்யாயோ?

முற்றிய கோங்கின் இளம் மொட்டுக்களைப் போலவும், அடி பெருத்த குரும்பைகளைப் போலவும், மழைத்துளிகள் விழும் போது கிழம்புகின்ற குமிழ்களைப் போலவும் உனது பெருத்த இளம் மார்பகங்கள் அழகாக உள்ளனவே. அழகிய மயிர் வரிசையாக வளர்ந்துள்ள முன்கைகளையுடை இளம்பெண்ணே! இவையெல்லாம் உன்னைக் காண்பவர்களின் உயிரைப்பறித்துவிடும் என்பதை நீ அறிவாயோ? இல்லை அறிய மாட்டாயோ?
நான் இவ்வளவு சொல்லியும் மற்றவர்களின் வேதனையை நீ அறியவில்லையா? மயக்க மடைந்தவர்களைப் போல எதுவுமே சொல்லாது நீ என்னைவிட்டு அகன்று போகின்றாயே! நான் சொல்வதைக் கேள்! நீ எந்தத் தவறும் செய்யவில்லை.

உன்னை இப்படி வீட்டைவிட்டு வெளியே வருவதற்கு அனுமதித்த உன் சுற்றத்தவர்களும் தவறு செய்தவர்களல்லர். மற்றவரைக் கொல்லும் தகைமைவாய்ந்த மதம்பிடித்த யானையைத் தண்ணீர்த்துறைக்கு கொண்டு செல்லும்போது மக்களுக்கு அபாயத்தை அறிவிப்பதற்காக அதற்கு முன்னால் பறையடிதுத்துச் செல்பவர்களை விடுவார்களே அதைப் போல நீயும் வெளியே செல்லும் போது உனக்கு முன்னால் பறையறைவித்தே செல்ல வேண்டும் என்று ஆணையிடாத இந்த நாட்டு மன்னனே தவறு செய்தவன் ஆவான்.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 8

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### நாவலர் எழுந்தார் (சென்ற வாரத் தொடர்ச்சி)

11. பிறிற்றோ அவர்களின் சார்பில் வாதாடியவர்கள் பற்றிக் கூறுக.
    • யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பிரபல வழக்கறிஞர்களாகத் திகழ்ந்தவர்கள்,
    • வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள்.

12. 'வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள்' என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது என்ன?
    • வாதம் புரிவதில் ஆற்றல் மிகுந்தவர்கள்.

13. 'பிறிற்றோவை ஆகாசத்தில் தூக்கிக்கொண்டுபோய் வைத்துவிட்டார்கள்' என்பதால் பெறப்படுவது என்ன?
    • பிறிற்றோ வெற்றிநிலையில் இருக்கிறார் என்பது பெறப்படுகின்றது.

14. 'பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி எழுந்த
கொழுங்கன லென்ன எழுந்தார்' - இதன் பொருளை எழுதுக.
    • வேள்வித் தீயினுள் நெய்யினைச் சொரிந்த பொழுது அக்கினியினது வாயானது மேன்மேலும் அதிகரித்துச் சுவாலைவிட்டு எரிவது போல எழுந்தார்.

15. '… கொழுங்கன லென்ன எழுந்தார்' - இவ்வாறு எழுந்தவர் யார்?
    • ஆறுமுகநாவலர்

16. ஆறுமுகநாவலரின் தன்னம்பிக்கை வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்ட ஓர் உதாரணம் தருக.
    • 'ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங்கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்' என்று ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியதை உதாரணமாகக் கூறலாம்.

17. 'மாக மடங்கலும் மால்விடையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தார்' -

இப்பாடலடிகள் மூலம் எடுத்துக்காட்டப்படுவதைத் தருக.
    • இராமனின் வீறுடன்கூடிய எழுச்சிமிக்க நடையை, நாவலர் எழுந்து வந்ததுடன் தொடர்புபடுத்தி நாவலரின் எழுச்சி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

18. அருணந்தி சிவாச்சாரியார் இங்கு எவ்விதம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்?
    • காச நோயால் அவதிப்பட்ட நாவலர் நீதியை நிலைநாட்டுவதற்காகப் புறப்பட்ட பொழுது காசம் காணாமற்போன விடயத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்.

19. அரசியலுக்கு எத்தகையவர் வரவேண்டும் என்று ஆறுமுகநாவலர் விரும்புகிறார்?
    • நேர்மையானவர் வரவேண்டும் என்று விரும்புகிறார்.

20. இராமநாதன் கட்சியினர் சோர்ந்துபோன வேளையில் ஆறுமுகநாவலர் நிலை பற்றிக் குறிப்பிடுக.

    • திண்டுத் தலையணைகள் சிதறுகின்ற அளவுக்கு நீதியை நிலைநாட்டுவதில் அக்கறை கொண்டு புறப்பட்டமை.

    • விலகு பிள்ளை என்று சொல்வதற்கு முன்னரேயே விசுவநாதபிள்ளை இடம்கொடுக்கின்ற அளவுக்கு ஆறுமுகநாவலரிடம் எழுச்சி காணப்பட்டமை.

    • ஆறுமுகநாவலரின் தோற்றம், கம்பீரமாகவும் பார்வை, வீறுகொண்டதாகவும் எண்ணங்கள், வேகம் கொண்டதாகவும் இருப்பதை எடுத்துக்காட்டிய கட்டுரையாளர், அந்த நேரத்தில் அவற்றை வருணிக்க ஒரு கம்பன் இல்லையே என்று நினைக்கின்ற அளவுக்கு ஆறுமுக நாவலரின் நிலை காணப்பட்டமை.

    • 'அது கிடக்க, எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை' என்று ஒருமை நிலையில் சொல்லுகின்ற அளவுக்கு அவரது நிலை இருந்தமை.

இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கம் பத்திரிகைக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள். க.பொ.த.(சா.த) பரீட்சை நெருங்குகிறது.

ஆசிரியர்-அரங்கம், இல:227, பார் வீதி மட்டக்களப்பு.

# கற்போம்

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

*இலங்கை புள்ளிவிபரத் தரவுகள்*

-- சராசரி ஆயுட்காலம் : 74.9வயது
-- கல்வி அறிவு : 93.3% (ஆண்கள் - 94.2% பெண்கள் - 92.6%)
-- ஆங்கில அறிவு : 10 %
-- சராசரி பிறப்பு விகிதம் : 16/1,000
-- சராசரி இறப்பு விகிதம் : 6.3 / 1,000
-- சிசு மரண விகிதம் : 8.2/ 1,000
-- சனத்தொகை வளர்ச்சி வீதம் : 0.863 %
-- சனத்தொகை அடர்த்தி : 334 சதுர கிலோ மீற்றர்

*பொருளாதாரம்*

ஜினி சுட்டெண் : 0.48
மனித வளர்ச்சி சுட்டெண் : 0.757 (73வது)
வறுமை வீதம் : 6.7

*தொடர்பாடல்*

நிலையான தொலைபேசி - 12.4/100
கையடக்கத் தொலைபேசி - 128.7/100
இணையம் பாவிப்பவர்கள் - 19.5/100

*போக்குவரத்து*

விமான நிலையம் - 18 (2010)
புகையிரத நிலையம் - 1,449 km
வீதிகளின் மொத்தநீளம் - 12,210km
Expressways - 170km




*உத்தியயோகபூர்வ வதிவிடங்கள்*

| | |
|---|---|
| -- ஜனாதிபதி | - ஜனாதிபதி மாளிகை |
| -- பிரதமர் | - அலரி மாளிகை |
| -- சபாநாயகர் | - மும்தாஜ் மகால் |
| -- பாராளுமன்ற உறுப்பினர் தங்குமிடம் | - சிராஸ்வதி |
| -- கல்வி அமைச்சு | - இசுறுபாய |
| -- சுகாதார அமைச்சு | - சௌசிரிபாய |
| -- திட்ட அமுலாக்கல் அமைச்சு | - செத்சிரிபாய |
| -- காணி அமைச்சு | - சம்பத்பாய |

இலங்கையில் . . . .

| | |
|---|---|
| -- மிக உயர்ந்த மலை | - பீதுருதாலகால மலை( 2524.69 m) |
| -- மிக நீளமான நதி | - மகாவலி கங்கை( 333 Km ) |
| -- மிக உயரமான நீர் வீழ்ச்சி | - பம்பரகந்த நீர்வீழ்ச்சி(240 m) |
| -- அதிக மழை பெறும் இடம் | - மாலிப்பொல |
| -- குறைந்த மழை பெறும் இடம் | - மறிச்சுக்கட்டி (975 mm/year) |
| -- இலங்கையின் சராசரி மழை வீழ்ச்சி | - 1905 mm |
| -- இலங்கையின் சராசரி வெப்பநிலை | - 26.70C (800F) |
| -- கூடிய வெப்பநிலை உள்ள இடம் | - திருகோணமலை |
| -- குறைந்த வெப்பநிலை உள்ள இடம் | - நுவரேலியா |
| -- மிக உயரமான குன்று | - கொக்காகல |
| -- மிகப் பெரிய குளம் / ஏரி | - சேனாநாயக்க சமுத்திரம் |
| -- நிலப்பரப்பு கூடிய மாகாணம் | - வடமத்தியமாகாணம் (10472 ச.கி.மீ) |
| -- நிலப்பரப்பு கூடிய மாவட்டம் | - அனுராதபுரம் (7180 ச.கி.மீ) |
| -- நிலப்பரப்பு குறைந்த மாவட்டம | - கொழும்பு (700 ச.கி.மீ) |

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## 'வாழைச்சேனை காகித ஆலை விரைவில் செயற்பாட்டுக்கு வரும்'

கிடைப்பது மாத்திரமல்லாமல், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சுமார் 2000 பேருக்காவது வேலைவாய்ப்புக்கு வழி ஏற்படும் என்று கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கணேசமூர்த்தியின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய காகித ஆலைகள் கூட்டுத்தாபன நிர்வாக சபையின் கீழ் வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டிய காகித ஆலைகள் உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கவிதை
## கல்லறை ஓலம்

என் தாய் வலி சுமந்து
என்னைப் பெற்றெடுத்தாளா?
என் ஈழ மண்ணில்
ஏர்கொண்டு பேர்த்தெடுத்தாளா?

இலவசக் கல்வியும்
இட்டுண்ணச் சோறும்
இருக்க இடமுமில்லாமலா
இணைந்தேன் வேங்கையாக?

இருள் சூழ்ந்து விழியிழந்ததென்
இனத்தின் விடியலுக்காக
இன்பங்கள் துறந்து
இன்னல்கள் பூண்டேன்...

பெற்றவள் அன்பைத் துறந்து
பேதையவள் காதலை மறந்தேன்...
தந்தை சூட்டிய பெயர் களைந்து
தமயன் சூட்டிய பெயர் பிணைந்தேன்...

தடைகளை உடைத்தறுத்து
தரணியில் மடிந்தேன் - தமிழருக்காக
இறுதியிலானது எனது பெயர்
இவன் இனத்துரோகியென்று...

கானகத்தில் கனவுகள் மறந்து
கண்ணுறங்கினேன்...
கால்களில் முள் தைக்க நடந்து
களமிறங்கினேன்...

களமாடிக் காத்து நின்று
காலிழந்தேன்...
அறுதியிலானது எனது கதை
அவன் பாதம் பட்டயிடம் பாவமென்று...

முன்னெடுத்த சமர்களெத்தனை
முறியடித்த சமர்களெத்தனை
அத்தனையும் பறைசாற்றும்
என் மாவீரம்...

அன்று சந்ததி காத்திட்ட
சரித்திரமானேன்
இன்று சங்கதிகள் பேசிடும்
தரித்திரமானேன்...

மறந்துவிடாதே
தமிழீழ மண்ணே என்னை- நீ
மறந்துவிட்டால்
மாரி கூட நனைக்காது உன்னை...

- புகழ் மயூரா -

## கரிற்றாஸ் எகற் நிறுவனத்தின் கல்விச் சேவை



கரிற்றாஸ் எகற் நிறுவனம், லிபரா நிறுவனத்தின் அனுசரணையுடன் தரம் 11 மாணவர்களுக்குச் செயலமர்வுகளை நடாத்திவருகின்றது. 22.10.2018, 23.10.2018 ஆகிய தினங்களில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள மட்/பாவற்கொடிச் சேனை விநாயகர் வித்தியாலத்திலும் மட்/மகிழவட்டவான் மகா வித்தியாலத்திலும் தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம்



ஆகிய பாடங்களுக்கு வெளி வலய வளவாளர்களைக்கொண்டு செயலமர்வைக் கரிற்றாஸ் எகற் நிறுவனம் நடத்தியிருந்தது. அச்செயலமர்வில் கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

தொடர்ச்சி...

## ஒரு பன்றியின் சிலையும் பல இக்கரைமாடுகளும்

கரங்கள். முன்னிரு கரங்களும் பன்றிக்குட்டிகளை அணைத்துப் பாலூட்ட, பின்னிரு கைகளும் மானும் மழுவும் தாங்கியிருந்தன. இந்தவகையிலுள்ள அரிதான சிற்பம்இலங்கையில் வேறெங்கும் கிடைப்பதாகத்தெரியவில்லை.

இருளில் சரிவரத் தெரியாவிட்டாலும் தேரைச் சுற்றிவந்த போது, திருமாலின் தசாவதாரச் சிற்பங்கள், முப்புரம் எரித்தான், ஆனையுரிபோர்த்தான், மாதொருபாகன், வீரபத்திரன், முதலான சிவனின் சிற்பங்கள். தேவியின் பல வடிவங்கள் தென்பட்டன. எல்லாமே இணையத்தில் கண்டு வியந்த தமிழகத்தின் பல அரிய சிற்பங்களை ஒத்தவை.

தான்தோன்றீச்சரத்தின் தேர்கள் மிகப்பழையவை. குறைந்தது முந்நூறு நானூறு ஆண்டுகள் பழைமையானவையாக இருக்கவேண்டும். "சிலோன் கசெற்றியர்" எனும்புகழ்பெற்ற நூலை 1834இல்எழுதியசைமன் காசிச்செட்டி, "கொக்கட்டிச்சோலைஸ்கந்தன் கோவில்" என்றுகுறிப்பிட்டு அந்நூலில் தான்தோன்றீச்சரம்பற்றிஎழுதியுள்ளார். அக்குறிப்பில்இங்குநிகழும் தேரோட்டம் பற்றிய விவரணமும்வருகின்றது. "புல்லுண்ட கல் நந்தி" கதைமூலம், தான்தோன்றீச்சரம் போர்த்துக்கேயரால் இடிக்கப்படவில்லை என்பது வாய்மொழியில் பதியப்பட்டுள்ளதால் அத்தேர்கள் மேலும் பழைமையானவையாகவும் இருக்கலாம். அங்கு முன்பு மூன்று தேர்கள் இருந்தனவென்றும், ஒன்று தானாகவே ஓடி மட்டக்களப்பு வாவியில் வீழ்ந்து மறைந்தது என்றும் சொல்லி, கோவிலின் அருகே வாவியில் இருக்கும் "தேர் தாண்ட பள்ளம்" எனும் பகுதியை சுட்டிக்காட்டுகிறார்கள்.

கிழக்கில் தனதுஉற்சவகாலம்"தேரோட்டம்" என்றுஅறியப்படும் பெருமையைப் படைத்ததுகொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்ஒன்றே. ஆனால்அந்தப்பெருமைக்குக் காரணமான இருதேர்களும் இன்று நம்கண்முன்னேசிதைந்துவருகின்றன. பிள்ளையாரும் முருகனும் பவனி வரும் "பிள்ளையார்தேரில்" இப்போது பெருமளவு பழைய சிற்பங்கள் இல்லை. சித்திரத் தேரும் அவ்வாறே. கவனிப்பின்மையால் செல்லரித்து உதிர்ந்து கொண்டிருப்பவை அதிகம்.

சிற்பக்கலை மனிதகுலம்கண்டுகொண்ட மகத்தான உன்னதங்களில்ஒன்று. அதுதனியேஒருசமயத்துக்கோ இனத்துக்கோ சொந்தமானதுஅல்ல. அரிதானமரச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ள இத்தேரின் பாகங்கள், சைவம்தாண்டி, தமிழினம் தாண்டிகாலமுள்ளவரைகாப்பாற்றப்பட வேண்டியவை. அதிலும்கோணேச்சரம், கேதீச்சரம், நல்லூர், தேனவரை நாயனார்கோவில், திருக்கோவில் முதலானகலைப்பொக்கிஷங்களை அந்நியர்ஆக்கிரமிப்பில் இழந்துநிற்கும்நாம், எஞ்சியிருக்கும் இதுபோன்ற கலைச்செல்வங்களை நம்அறியாமையாலோ கவனயீனத்தாலோ இழந்துவிடக்கூடாது. எனக்குத் தெரிந்தபலர், பெருமையாகத் தமிழகத்துக்கு சுற்றுலா சென்று மாமல்லபுரம், தஞ்சை, மதுரை என்று சுற்றிவந்து இன்ஸ்ராகிராமிலும் பேஸ்புக்கிலும் புகைப்படம் போட்டிருப்பார்கள். என்ன பார்த்தாய் என்று கேட்டால் பதில், "சும்ம கோவிலுகள் தான். அங்க ஒண்டும் இல்ல!". இருப்பது எப்படித் தெரியும்? சிற்பங்களைத் திருடி வெள்ளைக்காரனுக்கு விற்று கோடி கோடியாக உழைக்கிறார்கள் என்று செய்தி வாசிக்கும் போது மிக்சர் சாப்பிட்டுக்கொண்டிருப்பவர்கள் தானே நாம்? தமிழகத்தில் கூட அரிதான ஏனக்குருளைக்கருளி சிற்பம், இந்த ஈழமண்ணிலே, நமக்கு மிக அருகிலே ஒரு கோவிலில் இருக்கிறது என்பதும், இலங்கையின் மிகப்பழைய சிற்ப வடிவங்களில் சிலவற்றை நம்மூர்க் கோவிலொன்றின் தேரில் கண்டு மெய்சிலிர்க்க முடியும் என்பதும் தெரியாத நமக்கு, "தெரிந்து என்ன ஆகப்போகிறது?" என்று கேட்கும் நமக்கு, கலைச்செல்வங்களின் பெறுமதி எங்கே புரியப்போகிறது?

ஆற அமரசிற்பங்களை இரசிக்கும் அளவுக்குநேரம்இருக்கவில்லை. நடுங்கும்கரங்களால் ஏனக்குருளைக் கருளியைப் புகைப்படம்எடுத்துக்கொண்டிருந்தேன். "எல்லாரும் வித்தியாசமாபாக்கிறாங்கள், கெதியாவாங்கஅத்தான்" என்று முணுமுணுத்தபடியேஅருகில் நின்ற மைத்துனனுக்கு கைபேசியில் அழைப்பு. கோவில் வளாகத்தில் அமர்ந்திருந்த அவனது நண்பனொருவன் "என்னடா, தேர்எண்டஒண்ட இப்ப தான் முதமுதலா பாக்கிறேலாக்கும்" என்று கேட்டான். நான் போவோம் என்று கையசைத்தபடியேபெருமூச்சு விட்டபடி கிளம்பினேன். பின்புறம் இரண்டு தேர்களும் என்னைவிட்டுவேகமாக நகர்ந்துகொண்டிருந்தன.

## இலங்கை நாணயத்தின் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

செவ்வாயன்று ஒரு அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் விலை மிகக்குறைவாக 172.95 ரூபாய் என்ற நிலையை எட்டியது.

இம்மாதத்தில் இதுவரை இலங்கை ரூபாயின் பெறுமதி 2.1வீதத்தால் வீழ்ந்துள்ளது. இந்த வருடத்தில் 12.5 வீதத்தால் ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளதாக ரெஃபினிட்டி எய்க்கொன் தரவுகள் கூறுகின்றன.

## நற்பிட்டிமுனை வாரணம் விளையாட்டு கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வு!



(காரைதீவு நிருபர் சகா)

நற்பிட்டிமுனை வாரணம் விளையாட்டு கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

கழக தலைவர் பா.ரொமேஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் உட்பட அதிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.



தொடர்ச்சி...

## மலையக மக்களும் அரச பொதுநிர்வாகமும்...

பொது நிலையில் நோக்கினால் கல்வி, சுகாதாரம், வீடு, தொடர்பாடல், போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், அரச சேவைகளை பெறுதல், இனஅடையாளம் என சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல அடிப்படை உரிமைகளைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம், ஏற்பட்டு வரும் சிக்கல்கள், இதுவரை அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், அடைவுகள், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொன்றாக அடுத்த வாரம் முதல் ஆராயலாம். மலைகளை பேசவிடுங்கள்....

(தொடரும் )

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 24

2004 ஆம் ஆண்டு நாட்டில் மீண்டும் பாராளுமன்றத்தேர்தல் வந்தபோது, அம்பாறை மாவட்டத்தில் இருந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு(தமிழரசுக் கட்சி) பாராளுமன்ற உறுப்பினராகக் காரைதீவைச் சேர்ந்த பொ. பத்மநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2010ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தெரிவான அக்கரைப்பற்றைச் சேர்ந்த பியசேன அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு தனிவழி சென்றார்.

கடந்த 2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் திருக்கோவிலைச் சேர்ந்த க. கோடீஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். இடையில் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதனின் மரணத்துக்குப் பின்னர் இவரின் இடத்துக்கு பாண்டிருப்பைச் சேர்ந்த தோமஸ் என்பவரும் வந்து தலைகாட்டிப் போனார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு நியமிக்கப்பெற்றிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஜோசப் பரராசசிங்கத்தின் அகால மரணத்தை அடுத்து, அவரது இடத்துக்கு நியமிக்கப்பெற்ற அமரர் சந்திரநேருவின் புதல்வர் சந்திரகாந்தனும் இடையில் தலைகாட்டிப் போன பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்.

ஆனால். 1977ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் 40 ஆண்டுகாலப் பகுதியில், அமரர் ம. கனகரட்ணத்தையும் அவரின் மரணத்துக்கு பின் நியமனமான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் ஆகிய இருவரையும் தவிர அவர்களுக்குப் பின் தெரிவான அம்பாறை மாவட்டத்தின்

அத்தனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் வினைத்திறன் அற்றவர்களாகவே விளங்கியுள்ளனர். வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளுக்கு பாரமாகிப்போன இவர்களின் கையாலாகாத்தனத்தால், அம்பாறை மாவட்ட தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வு சுமார் அரைநூற்றாண்டு காலம் பிந்தள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## ஒக்டோபர் 24 போராட்டம்!

உரிய முறையில், உரிய காலத்துக்குள் மாற்றியமைக்க முடியும். அத்தகைய சக்தி இன்று நம்மிடம் இல்லை என்பது அப்பட்டமான உண்மை. கடந்த கால அரசியல் தலைமைகள் அந்த ஓர்மத்தை நலமடித்து வைத்திருந்தார்கள்.

இலங்கையின் வரலாற்றில் மாபெரும் தொழிலாளர் போராட்டமாக கருதப்படுவது 1960 ஒகஸ்ட் 12 ஹர்த்தால் போராட்டம். நாடளவில் நடத்தப்பட்ட அந்த ஒரே நாள் போராட்டம் ஆட்சியையே கவிழ்த்தியது. அவர்கள் அந்தப் போராட்டத் தயாரிப்புக்கு எடுத்துக்கொண்ட காலம் நான்கே வாரங்கள் தான். இந்த நான்கு வாரங்களுக்குள் எத்தனை கூட்டங்கள், பேச்சுவார்த்தைகள், திட்டமிடல்கள், தயாரிப்புகள் என்பதை இது பற்றி வெளியான நூல்களிலும், அன்றைய பத்திரிகைகளினதும் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. வரலாறு என்பது ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் நினைவுக் கொண்டாட்டமல்ல. அவை படிப்பினைகள். 60 ஆண்டுகளுக்குப் பின்னர் நாம் இந்த அனுபவத்தில் கற்றுக்கொண்டது தான் என்ன?

ஆசியாவில் பெரும் தொழிற்சங்கங்களில் ஒன்றாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கருதப்பட்ட காலத்தில் கூட குறிப்பிடும்படியான பாரிய தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதில்லை. ஆனால் இலங்கை ஆட்சியாளர்கள் மலையகத் தொழிலாளர்களின் பலத்துக்கு பயந்தே இருந்தார்கள். அந்த பயம் தொழிற்சங்க பலத்துக்கும், வாக்கு பலத்துக்கும் தான்.

ஆனால் மலையகத் தொழிலாளர்களை இ.தொ.கா தலைமை வெறும் தொழிற்சங்கமாக குறுக்கிவைத்திருந்தது. வெறும் தனிபட்ட அரசியல் லாபங்களுக்கு அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுத்தார்கள். காலத்துக்கு காலம் அற்ப சலுகைகளுக்கு சமரசம் செய்துகொண்டும், மக்களுக்கு சிறிய சிறிய வெற்றிகளைக் காண்பித்தும் அடிப்படைத் தேவைகளை ஒத்திவைக்க உடந்தையானார்கள். அதன் விளைவுகளை அடுத்தடுத்த மலையகத் தலைமுறைகளும் அனுபவிக்கின்றன. தொழிற்சங்கங்கள் மலையகத்தில் அரசியல் விழிப்புணர்வூட்டும் இயக்கங்களாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை.

அதையும் மீறி சுயமாக வளர்ந்த மக்கள் இன்று தன்னெழுச்சியுடன் நிமிர்கிறார்கள் என்றால் அதற்கு உரிய தலைமை கொடுத்து இயக்க, வழிகாட்ட எவரும் மிச்சம் வைக்கபடவில்லை.

மலையகத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் உணர்ச்சிபூர்வமான தன்னெழுச்சி அரசியல் விழிப்புணர்ச்சியாக மாற்றமுறும் காலத்தில் தான் ஆளும்வர்க்கத்துக்கு சிம்மசொப்பனமாக ஆக முடியும். பிரக்ஞையான கிளர்ச்சியாக உருவெடுக்க முடியும். நமது பலத்தை நிரூபிக்க முடியும். நீதியான கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

தமிழகத்தில் மெரினாவில் ஜல்லிக்கட்டுப் போராட்டம் தனியொரு அமைப்பால் முன்னெடுக்கப்படாதது தான். அங்கிருந்த பல சக்திகளும் தத்தமது நிகழ்ச்சிநிரலை பிரயோகிக்கவில்லை. ஒருமித்த குரலுக்காக ஒன்றுபட்டார்கள். அது வெற்றிபெற்றதற்கு பல்வேறு காரணங்கள் இருக்க முடியும். ஆனால் அவர்கள் பெருவாரி தமிழர் சனத்தொகையைக் கொண்ட மக்கள் கூட்டத்தினர் என்பது முக்கியமானது. காலிமுகத்திடல் மெரீனாவோடு ஒப்பிடுகையில் மிகச் சிறியதே. அதில் மிகச் சிறிய பகுதிக்குள் அடக்கிவிடக்கூடிய அளவில் தான் ஒக்டோபர் 24 போராட்டத்தில் கலந்துகொண்டனர். மலையக இளைஞர்களே அணிதிரளுங்கள் என்கிற கோஷம் மட்டுமே இதற்குப் போதாது என்கிற உண்மையை நாம் உணரவேண்டும். நாம் இலங்கையில் பிரதான நான்கு இனங்களில் நான்காவது இருக்கும் ஒரு இனமே. நமது புவியியல் இருப்பும் கொழும்பல்ல. நாம் மட்டுமன்றி இனம், மதம், பால், வயது வித்தியாசமின்றி ஆதரவாளர்களைத் திரட்ட வேண்டியவர்கள் நாங்கள். பெரும் மக்கள் சக்தியை ஆதரவு சக்திகளாக திரட்டும் அவசியமும் இத்தகைய போராட்டங்களுக்கு உண்டு

இவை பிசுபிசுத்து சப்பென்று போய்விடச்செய்ய முடியாது.

கடந்த காலங்களில் மலையகத்தில் தொழிலாளர் பிரச்சினைகளை வெகுஜனமயப்படுத்தி அணிதிரட்டுவதில் கடும் பாதுகாப்பு பிரச்சினைகள் இருந்தன. சாதாரண ஒரு சிறிய அளவிலான ஆர்ப்பாட்டத்தையோ, ஒன்று கூடலையோ செய்வதை சட்டங்கள் தடுத்தன. யுத்தத்தைக் காரணம் காட்டி அரசு இரும்புக்கரம் கொண்டு அவற்றை அடக்கியது. மலையகத்தில் பல இளைஞர்கள் தாம் சந்தேகத்துக்கு உள்ளாவோம், கைதுக்கு உள்ளாவோம் என்கிற பயத்துடன் பொதுவிடயங்களில் மட்டுப்படுத்தியே இயங்கினர்.

சாதாரண பண்பாட்டு விடயங்களைக் கூட ஒழுங்குசெய்வதில் நிறைய தயக்கம் இருந்தன. இதனால் மலையகத்தின் தொழிற்சங்கப் பிரச்சினைகள் மட்டுமல்ல பண்பாட்டு வளர்ச்சியும் கூட ஸ்தம்பிதமானது. பின்னடைவை சந்தித்தது.

வெறும் முகநூல் செல்பிக்காக கூடிக்கலைந்து போகும் ஒன்றாக இது அமைந்துவிடக்கூடாது. ஆளும்வர்க்கமும், முதலாளிமார் சம்மேளனமும், நமது அரசியல் தலைவர்களும் இந்தக் கோரிக்கைகளை அலட்சியம் செய்யும் பட்சத்தில் அல்லது கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் அடுத்த என்ன நடவடிக்கை என்பதை யார் முடிவுசெய்வது, அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டால் முடிவை நடைமுறைப்படுத்த உரிய சக்திகளை முகாமைப்படுத்தி முன்னெடுக்கும் வலிமை உண்டா? அதற்கான வழிகளை உருவாக்கியாயிற்றா? இது வெறும் ஒரு ஆர்ப்பாட்டமாக சுருங்கிவிடப்போகிறதா? அல்லது தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்படப் போகின்றதா?

நமது சிக்கல்களுக்கு தீர்வு தேடும் நோக்கில் ஆரம்பிக்கப்படும் அமைப்புகள் அலட்சியத்துடன் நடந்துகொள்ளாது முறையான திட்டமிடலுடன், பொறுப்புணர்வுடன் இவற்றை ஒழுங்கமைப்பது முக்கியம்.

சுயவிளம்பரத்துக்காகவும், ஆர்வக்கோளாறாலும், தனிப்பட்ட அரசியல் லாபத்துக்காகவும், சீசனுக்கு முளைத்து காணாமல் போகும் அமைப்புகளாகவும் இவை சுருங்கிவிடச் செய்ய முடியாது. ஆனால் அத்தகைய சக்திகளும் இதில் இருப்பதை தவிர்க்கவும் முடியாது.

இவை ஒழுங்காக ஒப்பேற்றாவிட்டால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் காத்திரமான எழுச்சிகளுக்கும் மக்களை ஒன்று திரட்டுவது கடினமாகிவிடும். மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது எந்த காத்திரமான முன்னெடுப்புகளுக்கும் அவசியமானது.

ஆனால் இது ஒரு நல்ல ஆரம்பம்.

## கிழக்கு மாகாணத்துக்கு 3 சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழலுக்கான ஜனாதிபதி விருதுகளில் மூன்று விருதுகள் கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு கிடைத்துள்ளன.

அம்பாறை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு முதலாம் இடமும், அக்கரைப்பற்று, நிந்தவூர் பொது வைத்தியசாலைகளுக்கு மூன்றாம் இடமும், கிடைத்துள்ளன. அதேவேளை இரண்டாவது விருது அறிவிக்கப்படவில்லை.

**லியோண்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவின் கீழ் இந்த விருதுகள் 19 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது. இதில் பாடசாலை, அரச நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் என்பன போட்டி இட்டன. 2011 ஆம் ஆண்டில் CEA (மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது)ஆல் தொடங்கப்பட்ட பசுமை விருதுகள் திட்டம், 2015 ல் ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகள் திட்டத்திற்கு மாற்றப்பட்டமை குறிப்பிட தக்கது. இந்த நிகழ்வில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (CEA) தலைவர் சந்திரரட்ன பல்லேகம, உலகளாவிய நிலையான அபிவிருத்தி மற்றும் பச்சை வாழ்க்கை முறையுடன் தொடர்புடைய பசுமை உற்பத்தி நடவடிக்கைகளில் உலகளாவிய கவனம் செலுத்துகையில், ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகளுக்கான சரியான நேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறினார்.

'இலங்கையில் பல தொழிற்துறை செயற்பாடுகள் உள்ளிட்ட பதினான்கு பிரதேசங்கள் ஜனாதிபதி விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன மற்றும் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிமுறைகளை கடைப்பிடிக்கும் அதே சமயம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு, அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றும் அந்த நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்படும்' என்றார்

தொடர்ச்சி...

## மூதாதையரின் காலடிகள்

பூரணை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. 'அல்லைக் கிழங்கின் அடிமுடி கண்டோர் கல்லைப் பிளக்கும் வல்லவராவார்' என்பது இவ்வாலயத்தின் தாரக மந்திரமாக இவ்வூர் மக்களுடைய வாயிலில் கேட்கக் கூடியதாக இருந்து வருகிறது.' ஈழத்தின் நம் மூதாதையரின் சுவடுகள் பதிந்த இடமாக குச்சவெளி அதன் தொன்மைகள் சொல்லி நிற்கின்றன












Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa